# எதிர்ப்பு நடவடிக்கைக்கு தமிழினம் தயாராகிறது!



இலங்கை வாழ் 30 இலட்சம் தமிழ் தேசிய இனத்தினரின் ஒன்றுபட்ட உரிமைக் கோரிக்கைகளை உதாசீனம் செய்துவிட்டு, சிங்கள பௌத்தத்துக்கு முதலிடமும் பாதுகாப்பும் அளிக்கும் புதிய அரசியல் திட்டத்தை இத்திங்கள் 22ம் நாள் நடைமுறைப்படுத்துவதென்று அரசு அறிவித்துள்ளதையடுத்து, தமிழ் பேசும் மக்களின் அடுத்த நடவடிக்கை பற்றி ஆராய்ந்திட தமிழ் அரசியல்கட்சிகளின் பிரதிநிதிகள், கட்சி சார்பற்ற தமிழ்க் கல்விமான்கள், அரசியலறிஞர்கள் ஆகியோரைக்கொண்ட ஆலோசனைக் கூட்டமொன்று இன்று (14.5.72) திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நடைபெறுகிறது:

தமிழ் தேசிய இனத்தின் மரணசாசனமாக அமைந்துள்ள புதிய அரசியல் திட்டத்துக்கு எதிராக தமிழ் மக்களின் ஒன்றுபட்ட குரலை உருவாக்கவும், ஒருமுகப்படுத்தப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது பற்றி ஆலோசிக்கவும், தமிழரசுத் தந்தை செல்வா அவர்கள் இம்மாநாட்டை கூட்டுகிறார்.

தந்தை செல்வா அவர்களின் கையொப்பத்துடன்கூடிய இந்த ஆலோசனைக் கூட்டத்துக்கான அழைப்புக் கடிதங்கள் அனைத்து தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள், பா.உ.க்கள், வடக்கு, கிழக்கு, மலைநாடு ஆகிய தமிழ்பேசும் பிரதேசத்திலுள்ள பிரமுகர்கள், கல்விமான்கள், சட்ட நிபுணர்கள், உட்பட சுமார் 100 பேருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

## திருமலையில் செல்வா கூட்டும் அதிமுக்கிய ஆலோசனை கூட்டம்!

இதனுல் ஆலோசனைக் கூட்டத்தில் அரசியல் சட்ட எதிர்ப்பு நடவடிக்கைகள் பற்றி இறுதி முடிவுகள் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சர்வகட்சி ஆலோசனைக் கூட்டத்தின் முதல்நாள்—அதாவது (13.5.72) சனிக்கிழமை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவும் திருமலையில்கூடி எதிர்ப்பு நடவடிக்கை குறித்து ஆராயவிருக்கிறது.


# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 25. தொலை பேசி: 23411

வள்ளுவர் ஆண்டு 2003, வைகாசி 1௳ (14-5-72) ஞாயிறு 1391 ரபி அவ் 29 புத்தகம் 25 இதழ் 25


### பனி கடுமையாக பெய்கிறதோ?

குமாரசூரியர் வட்டுக்கோட்டைத் தொகுதிக்கு போட்டியிட முன்வந்தால் நான் அவருக்கு விட்டுக் கொடுப்பேன்!

வைத்திலிங்கம் (கம்யூனிஸ்ட் கட்சி) வட்டுக்கோட்டை பா. உ. வாக வந்திருந்தால் மகிழ்ச்சியடைந்திருப்பேன்.

அடுத்த ஆறு வருடம் மட்டுமல்ல— அதன் பின்வரும் பொதுத் தேர்தல் மூலமும் வட்டு மக்கள் என்னையே எம்.பியாக வைத்திருப்பார்கள்.

தமிழ் காங்கிரஸ் செயற் குழுவுக்கு என்னைவெளியேற்ற அதிகாரம் கிடையாது. நான் தொடர்ந்தும் தமிழ் காங்கிரஸ்காரனே!

தமிழ் சோசலிச காங்கிரஸ் என்ற புதுக் கட்சி தொடங்கப்போகிறேன்.

(தியாகராசாவின் பொன் மொழிகள்)

# தமிழ் ஈழமெங்கணும் கறுப்புக் கொடிகள்!

## மே 22 ஈழத் தமிழினத்தின் கரிநாள்! தமிழ் கட்சிகளின் கூட்டு முடிவு!

இந்நாட்டுத் தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை உரிமைகளை மறுத்து, தமிழ் மக்களை அடிமைகளாக்கும் புதிய அரசியல் திட்டம் அரங்கேற்றப்படும் நாளான மே 22ம் நாளை, தமிழினத்தின் கரிநாளாகக் கருதி தமிழ் ஈழமெங்கும் அந்நாளை துக்கதினமாக அனுஷ்டிப்பதென்று யாழ்நகரில் தமிழரசுக்கட்சிப் பிரதிநிதிகளும் தமிழ் காங்கிரஸ் கட்சிப் பிரதிநிதிகளும் கலந்துகொண்ட ஒரு மாநாட்டில் முடிவு எடுக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

குடியரசு நாளன்று கறுப்புக் கொடிகளை தத்தம் இல்லங்களில் உயர்த்தி பரிபூரண துக்கம் அனுட்டிக்குமாறும், குடியரசு நாளையொட்டி நடைபெறும் கொண்டாட்டங்களையும், விழாக்களையும் பகிஷ்கரிக்குமாறும் தமிழ் மக்களையும், மாணவர்களையும் கோருவதென்று இக்கூட்டத்தில் மேலும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது.

குடியரசு நாளன்று பாடசாலைக்கு மாணவர்களை செல்ல வேண்டாமென்றும், பாடசாலைகளில் நடை

(7-ம் பக்கம் பார்க்க)

### ஆகா! இதுவல்லவோ வீரம்!!

கல்வியமைச்சரின் யாழ்ப்பாண விஜயத்தின்போது கறுப்புக் கொடிகளும் எதிர்ப்பு சுலோகங்களும் காட்டுபவர்களை கைது செய்யுமாறு வடபகுதி பொலிஸ் தலைமைக் காரியாலயம் உத்தரவிட்டுள்ளது.

— செய்தி;

கறுப்புக் கொடிகளையும் எதிர்ப்புக் குரல்களையும் கண்டு பயந்தோடுபவன் நானல்ல.

— கல்வியமைச்சர் பதியுதீன்;
(வீரகேசரி - 10-5-72)

# "புதிய அரசியல் திட்டத்தின்கீழ் தமிழ் சட்டவிதிகள் செல்லுபடியாகா!"

## அரசியல் நிர்ணய சபையில் கொல்வின் அறிவிப்பு!

"1966ம் ஆண்டு சனவரி மாதம் முந்திய அரசாங்கத்தினுல் நிறைவேற்றப்பட்ட தமிழ் மொழிப் பிரமாணங்கள் புதிய அரசியல் சட்டத்தில் ஒரு அம்சமாக இருக்கமாட்டா தென்பது தெள்ளத்தெளிவாக உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது.

"இந்தத் தமிழ் மொழிப் பிரமாணங்கள் சட்ட விரோதமானவை என்பதே அரசாங்கத்தின் கருத்தாகும். அரசாங்கம் இந்த தமிழ் மொழிப் பிரமாணங்களை சட்டப் புத்தகத்திலிருந்து நீக்காவிட்டாலும், அரசாங்கத்தின் கருத்து இதுதான்.

"தமிழ் மொழிப்பிரமாணங்கள் கடதாசியில் எழுதப்பட்ட வெறும் எழுத்துகளாகவே இன்று இருக்கின்றன. அந்தச்சட்டம் இறந்துபோன சட்டமாகிவிட்டது.

"அரசாங்கத்தின் இக்கருத்தை ஏற்றுக் கொள்ளாமல் தமிழ்மொழிச் சட்ட விதிகள், சட்டப்படி செல்லக் கூடியவை என்று

கருதினல், அதைப்பற்றி இறுதி முடிவு எடுக்க அவர்



கள் நீதிமன்றத்துக்குப் போகலாம்! நீதிமன்றம் தமிழ் மொழி விதிகளுக்குச் சட்டப்படி பலமுண்டுஎன்று தீர்ப்பளிக்குமானுல், அப்பொழுது வேறு விதிகளைக் கொண்டுவந்து நிறைவேற்றி இந்த விதிகளைச் செல்லுபடியாகாமல் செய்ய அரசு ஆலோசிக்கும்,

"தமிழ் மொழிப் பிரமாணங்களைப்பற்றி, எங்களது கருத்துக்களை நாங்கள் மாற்றிக் கொள்ளவில்லை. எதிர்க் கட்சியிலிருந்த போது அவ

(7ம் பக்கம் பார்க்க)

## கல்வியமைச்சரை யாழ்ப்பாணம் பெற்றோர் சங்கமும் பகிஷ்கரிக்கிறது!

அரசாங்கம் தமிழ் மாணவர்களுக்கு எதிராக பின்பற்றிவரும் பாரபட்சமான கல்விக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாகவும், தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதை கண்டித்தும், கல்வியமைச்சர் பதியுதீனின் யாழ்ப்பாண விஜயத்தை யாழ். பெற்றோர் சங்கமும் பகிஷ்கரிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சி. முருகானந்தன்
கொழும்பு.

கே: திமிர் தியாகராசாவைப் பற்றி சில வரிகள் தருக?

ப: காரைநகரினிலே ஓர் காவடி — காரைநகர் மக்களிடம் பல மாதங்கள் வேண்டி — பெற்றுக்கொண்டான் எம். பி. பதவி — அதைக் கூத்தாடி கூத்தாடி போட்டுடைக்கிருண்டி!!

ஃ

செ. சோமநாதன்,
மண்டைதீவு.

கே: அன்பர் சிவநாயகத்துக்கு அங்கொடை அனுபவம் உண்டா?

ப: போகிற போக்கைப் பார்த்தால் விரைவில் அந்த அனுபவம் கிடைக்கலாம்!!

ஃ

ஆ. ஷைலா,
சுழிபுரம்.

கே: வட்டுக்கோட்டைத் தொகுதியின் பா. உ. பெருமகனர் தியாகராஜா அவர்கள் இந்நாட்டில் பிரதம மந்திரியானல் ......?

ப: இந்நாடு முழுவதும் 'அங்கொடை' ஆகிவிடும்!

கே: தமிழரசுக் கட்சியின் தற்போதைய கொள்கை சமஷ்டியா தனிநாடா?

ப: தமிழ் ஈழத்தில் தமிழரசு ஒன்றை நிறுவுவது!

ஃ

தாவடி தாசன்,
வெளிமடை.

கே: தமிழரசுக் கட்சியில் வகித்துவரும் பதவிகளை துறக்க வேண்டுமென மூதூர் முதல்வர் தங்கத்துரையை அவரது தொகுதி இளைஞர்கள் கேட்டிருப்பது உண்மையா?

ப: முழுப்பொய்! அப்படிச் செய்திவந்த பின்புதான் மீண்டும் திரு. தங்கத்துரை இ. தொ. கழகத் தலைவராக தெரிவு செய்யப்பட்டிருக்கிருர்!

கே: செல்வா, கருணாநிதி சந்திப்பின் பெறுபேறுகளை நாங்கள் எப்பொழுது உணரக்கூடியதாக இருக்கும்?

ப: காலம் உணர்த்தும்!

ஃ

நா. கதிரவேற்பிள்ளை,
முரசுமோட்டை.

கே: தபாலமைச்சரும் கல்வி அமைச்சரும், பண்டிதரின்கேள்விகளுக்கு பதில் அளிக்கமுடியாது திணறுவதேன்?

ப: பண்டிதர் கேள்விகளின் முன்னுலுள்ள உண்மையைக் கண்டு ஏற்படும் அச்சத்தால்!!

ஃ

பி. ஜெயபாலன்,
சங்கானை.

கே: சொன்னதைச் செய்யாமல் திரியும் சோம்பேறிகள் கூட்டமா உங்கள் விடுதலை இயக்கம்?

ப: உங்களுக்கும் சேர்த்துத்தான் விடுதலைக்கு போராடுகிருேம். அதுசரி எதைச் சொல்லி எதைச் செய்யவில்லை என்று தயவு செய்து கூறுவீர்களா?

ஃ

என். செந்திராஜ்,
சுதுமலை,

கே: 'நாவலர்' பொதுச் செயலாளர் பதவியிலிருந்து விலகியதன் காரணமென்ன?

ப: அதை அவரே தெளிவாகக் கூறிவிட்டாரே!

கே: புதிய அரசியல் திட்டத்தை ஆதரிக்கும் தமிழ் துரோகிகளைப் பற்றிய தங்கள் கருத்து யாது?

ப: தமிழினத்தில் எப்படியோ விளைந்துவிட்ட களைப் புற்கள்!

ஃ

எஸ். சண்முகம்,
கொழும்பு 13.

கே: சுதந்திரன் பத்திரிகையை தமிழ்நாட்டுக்கு அனுப்புகிறீர்களா? தமிழ்நாட்டுத் தலைவர்கள் அதை வாசிப்பார்களா?

ப: அனுப்பப்படுகிறது. தமிழ்நாட்டுத் தலைவர்கள் சுதந்திரனை வாசிப்பது மட்டுமல்ல, சுதந்திரன் கருத்துக்களையே இலங்கைத் தமிழர்களின் உண்மையான கருத்துக்களாகவும் ஏற்றுக்கொள்ளுகிருர்கள்.

கே: நான் மலைநாட்டைச் சேர்ந்தவன். இலங்கையில் பிறந்ததற்கான பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் உண்டு. அரிசிக் கூப்பனும் உண்டு. ஆனல் பிரஜாவுரிமையில்லை. பிரஜா உரிமைக்கு (இலங்கை) மனு செய்துள்ளேன். அடையாள அட்டை பெற முடியுமா?

ப: நீங்கள் இலங்கையில் சட்டபூர்வமாக வாழுவதால், உங்களுக்கு அடையாள அட்டை நிச்சயம் கொடுபட வேண்டும்! பிரஜா உரிமைபற்றி பிரச்சினை இல்லை!

ஃ

தோ. யோகராஜா,
அநுராதபுரம்.

கே: இலங்கையை ஒரு குடியரசு நாடாக இலங்கை மக்கள் ஏற்றுக்கொள்வார்களா?

ப: மக்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால் என்ன? மந்திரிகள் ஏற்றுக்கொண்டால் போதாதா?

கே: பாகிஸ்தானிய மக்களின் துன்பத்தை பொறுக்க முடியாமல், இந்தியா அவர்களின் துன்பத்தை துடைத்தது. அதேபோன்று இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் துன்பத்தை எவர் துடைப்பாரோ?

ப: தன் கையே தனக்கு தவி!!

ஃ

கே. ஜெயராம்,
அட்டன்.

கே: வகுப்புவாதக் கட்சிகளை தடைசெய்ய வேண்டுமென்று ராஜா என்பவர் கூறியிருக்கிருரே...!

ப: நல்ல யோசனை. இந்நாட்டில் வகுப்புவாதம் பேசாத கட்சி ஒன்று உண்டென்றுல் அது இலங்கைத் தமிழரசுக் கட்சிதான்! இரண்டு வெவ்வேறு மொழிகளைப் பேசுகின்ற, இரண்டு வெவ்வேறு கலை, கலாசாரங்களைக் கொண்ட இரண்டு தனித் தனி இனங்கள் வாழும் இந்நாட்டில் ஒரு மொழி மட்டுமே உத்தியோக மொழி, ஒரு மதம் மட்டுமே அரசாங்க மதம், ஒரு இனம் மட்டுமே ஆளும் இனம், என்ற ரீதியில் செயல்படும் கட்சிகள் அனைத்துமே வகுப்புவாதக் கட்சிகள்தாம். இப்படிப் பட்ட கட்சிகள் அனைத்தும் தடைசெய்யப்படவேண்டியவையே! தமிழரசுக் கட்சி ஒன்றுமட்டுமே இரு இனங்களுக்கும், இரு மொழிகளுக்கும் சமத்துவம், சம சந்தர்ப்பம், மத சார்பற்ற ஆட்சி இவைகளை கோரிநிற்கிறது!

ஃ

பா. சிவபாலன்
கொழும்பு-11.

கே: தமிழரசுக் கட்சியைப் புனரமைப்புச் செய்யும் திட்டத்தின் கீழ் சுமார் முப்பதாயிரம் பேரைக் கட்சி அங்கத்தவர்களாக சேர்க்க இருப்பதாக தினகரன் செய்தி வெளியிட்டு இருந்ததே. கொழும்பு மத்திய தொகுதியில் அங்கத்தவராகச் சேர யாருடன் தொடர்பு கொள்ள வேண்டும்? தொடர்புகொள்ள வேண்டிய முகவரி என்ன

ப: செயலாளர், தமிழரசுக்கட்சி (கொழும்புக் கிளை) 16, அல்பிறட் அவுஸ் தோட்டம், கொழும்பு-3. எனும் முகவரிக்கு தொடர்பு கொள்ளுங்கள்!

ஃ

சந்திரன்,
சங்கானை.

கே: அண்ணன் அமிர்தலிங்கத்தை எம். பி. என்றுரைத்த நம் நா தியாகராவை எம். பி. என்று கூற கூசுகிறது. உங்கள் நாவுக்கு எப்படியிருக்கிறது?

ப: 'பனி' 'திமிர்' என்று அழைக்கிறது!!

கே: சிறியேன் தந்தை செல்வாவை வாழ்த்தி ஒரு பாடல் அனுப்பினேன். அது என்னவாயிற்று?

ப: தந்தை செல்வாவிடம் சேர்க்கப்பட்டாயிற்று!

கே: ''தமிழரின் பயங்கரவாதிகள்'' என்ற பட்டத்தை யாருக்குச் சூட்டலாம்?

ப: புதிய அரசியல் திட்டத்தை ஆதரிப்பவர்களுக்கு!

## புதிய போத்தலில் பழைய கள்

புதுயுகத்தில் புதுமை காண விரும்பிய புதுமை முட்டி முட்டியாக வாசகர்களுக்குப் புளித்த பழைய கள்ளை புதிய போத்தலில் வார்த்துக் கொடுக்க முன் வந்து கட்டுரையையும்தீட்டி விட்டார்.

கடந்து 22 வருடங்களுக்கு மேலாக தமிழரசுக்கட்சியில் ஒட்டி உறவாடிய புதுமை இப்போதுதான் அக்கட்சி பற்றி தப்பும் தவறும் கண்டு பிடித்து விட்டாராம். என்னே விந்தை! கடந்த காலத்தில் அவர் கட்சியை வைத்துத் தன் படைப்புக்களை விற்பனை செய்து வந்ததை மக்கள் மறந்துவிடவில்லை. தமிழரசுக்கட்சியே அவருக்கு வாய்ப்பும் வசதியும் அளித்து இன்றைய நிலைக்கு உயர்த்தியதை அவர் நன்றி மறந்துவிட்டார். அதுவும் அவர் இன்று ஓர் ஆசிரியர். அதைவிடத் தலைமை ஆசிரியர். தான் சென்ற பாதை தவறானதென்பதை அறிய இத்தனை ஆண்டு காலமாக உணரமுடியாதவர் மாணவர்களுக்கு எப்படிஉபதேசம் செய்யப் போகிருரோ!

புத்துலகம் காணப் புறப்பட்ட புதுமை காண முன்னரே மக்கள் அவரைமறந்து விடுவார்கள் என்பதைஅவர் அறிவதற்கு அதிக நாட்கள் வேண்டியதில்லை. பெயரளவில் புதுமையாக இருந்து இன்னெரு புதுமையை கர்தலித்து, பின்னர் கைவிட்டு அதன்பின் மூன்று புதுமைகளுக்கு முறையாகப் புத்துலகம் காட்டியவர் அவர் என்பதை நாடறியும். அவர் நண்பர்கள் அறிவர்.

நாவேந்தன் வழி நடக்கும் புதுமை இன்று நாவேந்தன் அட்றஸ் இன்றி அங்கலாய்ப்பதை நன்கு அறிவார். இதன் பின்னரும் அவருக்கு ஞானம் பிறக்கவில்லைபோலும்.

வெளியிடத்துக்கு மாற்றம் வந்ததும் வைத்திய லீவில் பலமாதங்கள் இருந்தபோது அவர் பல புதுமைகளைச் செய்தார். அதன் காரணமாக ஒரு நெசவகத்தையே ஆரம்பித்தார்.

வைத்திய லீவில் இருந்த அவர் அரசாங்கம் மாறியதும் வவுனியாவுக்கு மாற்றப்பட்டார். இந்த மாற்றத்திலிருந்து புதுயுகம் பிறந்தது. புதிய கட்சி, புதிய தொடர்புகள், புதுமை படைக்க புது ஆட்கள். இப்போது மட்டிகள் என்று குட்டிச் சுவரில் முட்டி மோதுகின்றுர். அவருக்கு முகத்தில் 'மட்'தான் பரிசாகக் கிடைக்கும்.

கோவில் புதுக்குளத்தில் பெற்றுர் ஆசிரிய சங்கத்தை கூட்டி சிங்களம் படிப்பிக்க சிங்கள ஆசிரியர் வேண்டுமென்றுர். அச்சங்கத்திற்கு தலைவர் இந்தப் புதுமை தான். தலைமையாசிரியர் பதவியுடன் புத்தூருக்கு மாற்றமும் கிடைத்தது.

இப்போதுபுதுமையில் மட்டிகளென்று எழுதுகிறுர். அடுத்து மூன்றுந்தர அதிபர் பதவி கிட்டுமாம்; எல்லாருக்கும் எடுத்துரைக்கிறுர்.

அதிபர் அல்ல வித்துவான் [illegible] பதியாகவும் ஆகட்டும் [illegible] பற்றி நாம் கவலைப்படவில்லை. ஆனல் தமிழரசுக் கட்சி பற்றி இப்போதுதான் ஏதோ விரோதமான புதுமைகளைக் கண்டுவிட்டேன் என்று 'சில்லறைச் சேட்டைகள் விடுவதை இனி வேதாளம் அனுமதிக்கப்போவதில்லை இதுஉண்மை; வெறும் வார்த்தை இல்லை.

★

### ஈழநாடும் குயுக்தியும்

திடீர் அமைச்சர் செல்லையா குமாரசூரியர் ஈழநாட்டுச்செய்தியொன்றைக் கண்டு துடித்துப்பதைத்து ரூபா 200/= பணம் அனுப்பி செய்தி வெளியிட்டவரையும் பாராட்டி ஒரு கடிதம் அனுப்பினர். இச்செய்தி எழுதியவர் முன்னர் அம்மையார் புராணம் எழுதி அமைச்சரிடம் காட்டி அவருடன் சேர்ந்து படமெடுத்துக்கொண்ட பலே கெட்டிக்காரர்.

குமாரசூரியர் கடிதம் கண்டதும் ஈழநாட்டு நிர்வாகத்தினர் அதனை முன்பக்க முதல் செய்தியாக்க விரும்பினர். ஈற்றில் வாலைச் சுருட்டிக்கொண்டு அதைச் சும்மா செய்தியாக வெளியிடுங்கள் என்று பதில் கூறினர். அப்படியே அதுவும் செய்தியானது. அது பற்றி நடந்த சம்பாசனையைக் கீழே படியுங்கள்.

மனேஜர்: [illegible]

## இலக்கிய உலகு

-"வேதாளம்"-

எழுத்தாளர்: வியட்னுமில் அமெரிக்கா குண்டு வீச்சு.

மனேஜர்: அது தினமும் நடக்கும் சம்பவம். அதை விட்டு விட்டு குமாரசூரியரின் கடிதத்தை ''லீட்'' பண்ணுங்கள்.

எழுத்தாளர்: ஐயா! தியாகராசா எம். பி. யின் செய்திக்கு ஈழநாடு முன்பக்கம் கொடுத்தது கண்ட குயுக்தியார் தமது பதிலில் ஈழநாடும் துரோகக் கும்பலிடம் சாய்கிறது என்று எழுதினர்.

மனேஜர்: நீர் படித்துப் பார்த்தீரா? அப்படியா எழுதப்பட்டுள்ளது?

எழுத்தாளர்: நான் படித்தேன். குயுக்தியார் பதிலில். அப்படி எழுதிய குயுக்தியார் குமாரசூரியரின் கடிதத்தை முன் பக்கத்தில் போட்டால் ஈழநாட்டை சாடு சாடென்று சாடி விடுவார் அல்லவா?

மனேஜர்: சரி, சரி. அதை அப்படியானல் செய்தியாகப் போடு.

இதுதான் சம்பாசனை. குயுக்தியாரின் இரண்டு வரிப்பதில்கள் செய்த திருவிளையாடலைப் பார்த்தீர்களா?

ஈழநாடு தந்தை செல்வா தமிழ் நாட்டிலிருந்து திரும்பியதும் அவர் கருத்தை முன் பக்கத்தில் வெளியிட்டது. இதற்கு அரசாங்க அதிபர் கேள்விமேல் கேள்வி கேட்டு இதற்கும் முக்கியத்துவமா? என்று ஈழநாட்டுக் காரரை விசாரணை செய்தாராம்.

★

### ஈழநாட்டில் குமைச்சல்

நெருப்பில்லாமல் புகைக் காதல்லவா? ஈழநாடு வார இதழ் பொறுப்பை புதிய பெண்மணியிடம் ஒப்படைத்தது பற்றி ஒரு புகைச்சல் ஈழநாட்டில் ஏற்பட்டுள்ளது. இப்பெண்மணியிடம் ஈழநாடு வார இதழ் ஒப்படைக்கப்பட்டபின் வார இதழ் உப்புச்சப்பற்று விளங்குகின்றது என்பது வாசகர் கருத்து மட்டுமல்ல ஈழநாட்டு எழுத்தாளர் கருத்துமாகும்.

போதாதற்கு மூஞ்சூறு விளக்குமாற்றையும் தூக்கியதாக புதிதாக வெளி வர இருக்கும் வார இதழ் ஒன்றிற்கும் இப்பெண்மணி ஆசிரியையாக ஆக்கப்பட்டுள்ளார். ஈழநாடே அதையும் வெளியிட இருக்கின்றது. இப்பெண்மணிக்கு இருக்கும் ஒரே தகைமை தகப்பனர் முன்னர் ''றிப்போட்டர்'' ராக இருந்ததுதான். அத்துடன் இவர் ஒரு பட்டதாரி. எழுத்தாளர் பட்டதாரியாக ஆக முடியும்; பட்டதாரி எழுத்தாளராக முடியவே முடியாது, என்று ஈழநாட்டு எழுத்தாளர் ஒருவர் மனம் புழுங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுபடுவோம்!

# உரிமை காப்போம்!

அன்பு நண்பா,

'வெள்ளம் போல் தமிழர் கூட்டம், வீரங்கொள் கூட்டம், அன்னர் உள்ளத்தால் ஒருவரே' யென்றும் 'ஒரு தமிழன் தமிழர்க்காய் உயிர் வாழ்கின்ருன்; உயிர் வாழ்வோன் தமிழர்க்கே தனைஈகின்ருன்' என்றும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடினுனே அவனது அந்த எழுச்சி மிகு வரிகளை நினைத்துக்கொண்டேன்—புதிய அரசியல் திட்டத்தை எதிர்ப்பது என்று தமிழரசுக்கட்சியைப் பின்பற்றி அகில இலங்கைத் தமிழ் காங்கிரசின் செயற்குழு எடுத்திட்ட முடிவுதனை ஏடுகளில் வாசித்தபோது!

**ஆம், நண்பா, புதிய அரசியல் திட்டம் தமிழினத்தை அடிமைப் படுகுழியில் தள்ளி வீழ்த்திடும் மரணசாசனம்; தமிழனின் தன்மானத்துக்கு சவால் விடுத்திடும் சதித்திட்டம்; தமிழினத்தை காலகதியில் இந்நாட்டிலிருந்து அழித்தொழித்தொடும் நயவஞ்சகத் திட்டம்; என்பதனை உணர்ந்து அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் அதை எதிர்த்து குரலெழுப்பியுள்ளது இந்நாட்டுத் தமிழினத்தின் வரலாற்றில் ஒரு புதிய சாதனையென்பதில் தடையில்லை!**

தமிழரசுக்கட்சி, தமிழ்காங்கிரசுக்கட்சி, தமிழர்சுயாட்சிக்கழகம், ஈழத் தமிழ் ஒற்றுமை முன்னணி ஆகிய நான்கு கட்சிகளுமே புதிய அரசியல் திட்டம் தமிழினத்துக்குத் தீதுபயப்பது என்பதை உணர்ந்து, அதை எதிர்த்திடுவதில் ஒன்றிணைந்து நிற்பது, ஈழத் தமிழினத்தின் எதிர்கால வெற்றிக்கு ஒரு நல்ல சகுனமாகத் தெரிகிறது!

**இந்நாட்டுத் தமிழினத்தின் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளான தமிழரசுக்கட்சியும், தமிழ் காங்கிரஸ் கட்சியும் அங்கீகரிக்கப்படாத கட்சிகளான சுயாட்சிக்கழகமும் ஈழத் தமிழ் ஒற்றுமை முன்னணியும் ஆக நான்கு தமிழர் கட்சிகளும் ஒருங்கிணைந்து புதிய அரசியல் திட்டத்தை நிராகரித்துள்ளதால், புதிய அரசியல் திட்டத்தை இந்நாட்டின் இரண்டாவது பெரிய இனமான தமிழினமும் ஏற்றுக்கொண்டு விட்டதாக ஆட்சியாளர்கள் வெளியுலகத்துக்கு இனிமேல் எடுத்துக் கூறி ஏமாற்றிட முடியாது!**

**ஈழத் தமிழர்கள், புதிய அரசியல் திட்டத்தை முற்ருக நிராகரித்து விட்டார்கள்; முழுமூச்சுடன் அதை எதிர்க்கிருர்கள் என்ற உண்மையை உலகத்தின் கண்களிலிருந்து இனி மறைத்துவிட முடியாது!**

**தமிழ் காங்கிரசிலிருந்தும் தமிழரசுக்கட்சியிலிருந்தும் வெளியேற்றப்பட்ட ஒரு சில துரோகிகளை நம்பி, அவர்களை தமிழினத்தின் பிரதிநிதிகளாக கணக்கெடுத்து—அவர்கள் தரும் ஆதரவை முழுத் தமிழினத்தின் ஆதரவு என்று அரசாங்கம் கருதுமானல்—அல்லது அப்படி வெளியுலகுக்கு எடுத்துக் காட்டிட முயலுமானல்—அரசு தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ளுகிறது என்பதுதான் பொருள!**

புதிய அரசியல் திட்டத்தை ஆதரிக்கப் போவதாகக்கூறும் ஒரு சில தமிழ் பிரதிநிதிகளைக் கூட, மிகவும் பணிவன்புடன் இப்போதும் இக்கடைசிநேரத்திலும் கேட்கிறேன்—தாள் பணிந்து கேட்கிறேன்— தயவு செய்து உங்கள் மனத்தை மாற்றுங்கள்! தமிழினத்தின் மானத்தை காப்பாற்றுங்கள! உங்களுக்கும் எங்களுக்கும் இருக்கும் பெருமைக்குரிய ஒரே சொத்தான, தமிழ் மொழிக்கும் இனத்துக்கும் துரோகம் செய்யாதீர்கள்! வரலாற்றில் அழியாத வடுவை —மாபெரும் துரோகி என்ற அவப்பெயரைத் தேடிக்கொள்ளாதீர்கள்-புதிய அரசியல் சாசனத்துக்கு ஆதரவாக தயவு செய்து வாக்களிக்காதீர்கள் என்றெல்லாம் தமிழ்த் தாயின் பேரால் யாசித்து நிற்கிறேன்!

தமது கட்சியின் முடிவைப்பின்பற்றி புதிய அரசியல் சாசனத்தை எதிர்க்கப்போவதாக துணிச்சலுடன் அறிவித்துள்ள திரு. ஆனந்தசங்கரி, திரு. தேவநாயகம் போன்ருேர் காட்டியுள்ள முன்மாதிரியை, பின்பற்றிட சி. எக்ஸ். மாட்டின், அருளம்பலம், தியாகராசா, ராஜன் செல்வநாயகம், தம்பிராஜா போன்ற தமிழ் பிரதிநிதிகள் வீணை வரட்டுக்கௌரவங்களையும், அற்ப சலுகைகள் மீதான ஆசைகளையும் கைவிட்டு முன்வர வேண்டுமென்று இக்கடைசித் தருணத்திலும் தமிழினம் எதிர்பார்க்கின்றது!

**ஆம் நண்பா, புதிய அரசியல் திட்டத்துக்கு ஆதரவாக எந்தத் தமிழனுவது வாக்களிப்பானுனல் அப்படி வாக்களிப்பவன் நிச்சயமாக ஒரு தமிழனுக்கும் தமிழச்சிக்கும் ஜனித்தவன் என்று கூறமாட்டேன்!**

இன்னென்று கவனித்திருப்பாய் நண்பா, தமிழ் மக்களின் கண்களிலே மண்ணைத் தூவும் நோக்குடன் ஏரிக்கரைத் தினகரன் ஈனத்தனமான பிரசாரமொன்றில் ஈடுபட்டுள்ளதைத்தான் குறிப்பிடுகிறேன். குமாரசூரியர் முயற்சியால் நீதிமன்ற மொழி விஷயத்தில் தமிழுக்கு ஏதோ உயரிய அந்தஸ்து கிடைத்திருப்பதாக கதையளந்து வருகிறது தினகரன்!

தமிழுக்கு ஏதாவது அற்பசொற்ப சலுகை கிடைக்குமானுல் அது தமிழரசுக் கட்சியின் தலைமையில் தமிழினம் ஒன்றுபட்டெழுப்பிவரும் எதிர்ப்புக் குரலால் விளைந்த பயனே தவிர கோலேந்திகளுக்கு குற்றேவல் செய்துவரும் அடிமைகளால் ஏற்பட்டதல்ல என்பதை தமிழ் மக்கள் அறிவார்கள்!

**புதிய அரசியல் சட்டத்தை நாம் எதிர்க்கிருேமென்றல் நீதிமன்ற மொழி ஒன்றுக்காக மட்டுமல்ல — தமிழினத்தின் ஆட்சியுரிமை, மொழியுரிமை, மத உரிமை மற்றும் அடிப்படை உரிமைகள் முழுவதும மறுக்கப்பட்டுள்ள காரணத்தால் - புதிய அரசியல் திட்டத்தைப் பூரணமாக நாம் நிராகரித்திருக்கிருேம்! எனவே நீதிமன்ற மொழிப் பிரச்சினையில் சில நீக்குப்போக்கு சலுகைகளை காட்டி தமிழினத்தை ஏமாற்றிவிட முடியாது!**

## அரசியல் மேடை

நண்பா உண்மையில் நீதிமன்ற மொழி விஷயத்தில் கூட அடிப்படையில் ஏதாவது மாற்றம் செய்யப்பட்டிருக்கிறதா என்று துருவித் துருவிப் பார்த்தோமானுல் ஏமாற்றம்தான் எஞ்சுகிறது!

''எனினும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முதனிலை நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் நிறுவனங்களின் விடயத்திலும், கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட நீதிமன்றங்கள் நியாய சபைகள் வேறுநிறுவனங்கள் என்பனவற்றின் விடயத்திலும், 1958ம் ஆண்டின், 10ம் இலக்க இணக்க சபைத்திட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இணக்க சபைகள் விடயத்திலும் **தேசிய பேரவை அதனது சட்டத்தினுல் அல்லது சட்டத்தின் கீழ் வேறு வகையில் ஏற்பாடு செய்யலாம்''**

இப்படித்தான் திருத்தப்பட்ட நீதிமன்ற மொழி சம்பந்தமான விதி கூறுகிறது. நன்ருக கவனி நண்பா, **தேசிய பேரவை, அதனது சட்டத்தினுல் வேறுவகையில் ஏற்பாடு** செய்யலாமாம்! இதைத்தான் நகல் சட்டமும் கூறியது — திருத்தப்பட்ட விதியும் இப்போது கூறுகிறது. இதில் அணுவளவும் மாற்றம் செய்யப்படவில்லையே!

**தேசிய பேரவை வேறு ஏற்பாடு செய்யலாம் என்று இறுக்கமற்ற நிலையில் நீதிமன்ற மொழிச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறதே தவிர, தமிழுக்கு உரிமை தரப்படும என்று அதில கூறப்படவில்லையே!**

**தமிழுக்கு உண்மையிலே உரிமை தர விரும்புபவர்களாக இருந்தால், வடக்கு, கிழக்கு மாகாண நீதிமன்றங்களில் தமிழை நிர்வாக மொழியாக்க [illegible] என்று இட்டவட்டமாக வரையறை செய்து கூறியிருக்கலாமல்லவா? ஏன் அப்படிக் கூறவில்லை?**

**திருத்தப்பட்டு, இறுதியாக அரசியல் நிர்ணய சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் அரசியல் சட்டம், தமிழினத்தின் கழுத்தில் சுருக்குக் கயிறு போட்டு இழுப்பது போல — நகல் சட்டத்தையும் விட ஆபத்தானதாக அமைந்திருக்கிறது — பனையிலிருந்து விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல இருக்கிறது.**

ஆம், திருத்தப்பட்ட அரசியல் சட்டப்படி, இந்நாட்டில் பௌத்த மதத்துக்கு முதன்மை ஸ்தானம் வழங்கப்பட்டிருக்கிறது. பௌத்த மதத்தை பேணிவளர்த்தலும், பாதுகாத்தலும் அரசின் கடமையாதலும் வேண்டும் என்றும் அதில் கூறப்பட்டிருக்கிறது. இதன் பொருள் பௌத்தம் நாட்டின் அரசமதமாகப் போகிறது என்பதுதான்! இந்நாட்டிலுள்ள ஏனைய மதத்தவர்களுக்கு, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமியர்களுக்கு இது மிகப் பெரிய அடியாகும்!

**தமிழ் மக்கள் மீது வீழ்ந்துள்ள மற்ருேர் அடி அவர்களது மொழி சம்பந்தப்பட்டதாகும். 1966ம் ஆண்டு சனவரி மாதம் எட்டாம் திகதி நாடாளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்ட தமிழ் மொழி உபயோகச்சட்ட விதிகளுக்கு அரசியல் சட்டரீதியான அந்தஸ்தும் பாதுகாப்பும் கிடையாதென்று அரசியல் சட்டத்திலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது!**

எந்த ஒரு அரசும் தமிழ் மொழிச்சட்ட விதிகளை விரும்பினுல் நடைமுறைப்படுத்தலாம் — விரும்பாவிட்டால் குப்பைத் தொட்டிக்குள் வீசலாம் என்னும் நிலைக்கு தமிழ் மொழிச் சட்ட விதிகள் தள்ளப்பட்டிருக்கின்றன. இது இந்நாட்டுத் தமிழினத்தை இழிவுபடுத்துவது போன்றதாகும்! ஆம், நம் உயிருக்குயிரான மொழியை இழிவுபடுத்துவது நம்மை அவமானப்படுத்துவது போன்றதுதான்!

தமிழினத்தைப் புதைகுழிக்கு அனுப்பும் இந்தப் புதிய அரசியல் திட்டம் இத்திங்கள் 22-ம் நாள் நடைமுறைப்படுத்தப்பட விருப்பதாக ஆட்சியாளர்கள் அறிவித்துவிட்டார்கள். தமிழ் தேசிய இனத்தின் ஒன்றுபட்ட எதிர்ப்புக்குக் கொஞ்சம்கூடச் செவிசாய்க்க மறுத்து விட்டார்கள்! அவசரகாலச் சட்டத்தின் துணையுடன் புதிய அரசியல்திட்டம் நடைமுறைக்கு வரப் போகிறது இன்னும் சிலதினங்களில்!

புதிய அரசியல் திட்டம் தமிழ் மக்களுக்கு படுபாதகமானதென்றும் புதிய சட்டம் கொண்டுவரப்படும் நாள் தமிழினத்தின் கரிநாள், துக்க நாள் என்றும் தமிழ் காங்கிரசும் அறிவித்திருக்கிறது!

**உண்மையிலேயே நண்பா, என் இதயம் மகிழ்ச்சிக் கடலில் மூழ்குகிறது; புளகாங்கிதமும் பெருமிதமும் அடைகிறேன் என் தமிழ்ச் சாதியை எண்ணி! புதிய அரசியல் திட்டத்தை எதிர்த்து தமிழினத்தின் உரிமைகளைக் காப்பதிலே தமிழினத்தின் விடுதலைப் பேரியக்கமான தமிழரசுக் கட்சியுடன் இணைந்து கூட்டாக செயல்பட தமிழ்க் காங்கிரசு முடிவெடுத்திருப்பது ஒவ்வொரு தமிழனையுமே பெருமைப்பட வைக்கிறது!**

தமிழரசுக் கட்சிக்காரனுக இருந்தாலும் சரி, தமிழ்க் காங்கிரசுக்காரனுக இருந்தாலும் சரி, சுயாட்சிக்காரனுக இருந்தாலும் சரி, — முதலில் தமிழ் மொழியும் தமிழ் இனமும் தமிழர் நிலமும், தமிழ் கலையும், தமிழர் மதங்களும் காப்பாற்றப்பட்டால்தான் தமிழினம் தனித்துவத்துடன் இந்நாட்டில் தலைநிமிர்ந்து வாழமுடியும் என்பதைப் புரிந்துகொண்டால் நமக்குள்ளே வேற்றுமைகள் தோன்றுவதற்கு இடமேயில்லை !

ஒன்றுபடுவோம் உரிமை காப்போம் — இதுவே இன்றைய தமிழர்களின் இதய முழக்கமாக ஓங்கி ஒலிக்கட்டும்! மாற்ருர் செவிப்பறைகளில் இந்த முழக்கம் நாராசமாக ஒலிக்கட்டும்!

உன் அன்புத் தோழன்,

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

**தணிக்கை,**

**X**

# புதிய அரசியல் திட்டத்தில் தமிழுக்கு உரிமை தரப்பட்டிருக்கிறதா?

## ஊர்காவற்றுறை பா. உ. பண்டிதர் இரத்தினம் ஆட்சியாளரைக் கேட்கும் ஒரேயொரு கேள்வி!

பிரதம அமைச்சரவர்களே! பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயக்கா அவர்களே! அமைச்சர் (தமிழ்) குமார சூரியர் அவர்களே! சிறுபான்மை இனத்தைச் சார்ந்தவரெனக் கூறி இலங்கையில் இன ஒற்றுமையை ஏற்படுத்த விரும்பும் "தமிழ் ஆர்வம்" உள்ள அமைச்சர் பதியுதீன் மாமூத் அவர்களே! அரசாங்கத்தை ஆதரிக்கும் அருளம்பலம், தியாகராசா, மாட்டின் அவர்களே! ஏனைய சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களே!

புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தில் தமிழ்மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்துடன் தமிழ்மொழிப் பிரமாணங்களையும் குறிப்பிடுவதால் தமிழ் மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றலாம் என எண்ணுகிறீர்கள் போலும்.

தமிழ்மொழிச் சட்டம் பிரமாணங்கள் இன்றி சட்டத்தை நடைமுறைப் படுத்த முடியாதது.

1958ல் இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட காலம் தொடக்கம் இன்று வரை இச்சட்டத்தை நடைமுறைப்படுத்த நீங்கள் தக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

1960ம் ஆண்டு இச் சட்டத்தின் கீழ் சில பிரமாணங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தீர்கள். பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் சில பா. உ. க்களும் செய்த சூழ்ச்சியால் அப்பிரமாணங்கள் நிறைவேற்றப்படாமல் மீட்கப்பட்டன.

பின்னர் 1966ல் முன்னைய அரசாங்கம் அரை குறை உரிமை கொடுக்கும் தமிழ் மொழிப் பிரமாணங்களை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது.

அந்தப் பிரமாணங்களை எதிர்க்கட்சியில் இருந்த நீங்கள் தீவிரமாக எதிர்த்தீர்கள்.

பாராளுமன்றத்தில் தமிழ் மொழிப் பிரமாணங்களை நடைமுறைப்படுத்தமாட்டோம் என்று பகிரங்கமாக சென்ற ஆண்டில் அறிவித்தீர்கள். தமிழில் கடிதம் எழுதும் மக்களுக்குக் கையெழுத்திட்டு தமிழில் மறுமொழி அனுப்பும் உரிமையை இப்பிரமாணங்கள் கொடுக்கின்றன என நான் பாராளுமன்றத்தில் வற்புறுத்தி வாதாடியபொழுது இப்பிரச்சினையை நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்லுமாறு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா எனக்குக் கூறினார். இப்பொழுது இந்தப் பிரமாணங்களை நடைமுறைப்படுத்தாமல் சிங்களத்தையே திணிக்கின்றீர்கள்.

தமிழ்ப் பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ் மக்களின் வாக்குமூலங்கள் இன்றும் சிங்களத்திலேயே பதியப்படுகின்றன. தமிழ் மொழி தமிழ்ப் பகுதிகளிலேயே புறக்கணிக்கப்படுகின்றது.

தமிழ் தெரியாத உத்தியோகத்தர் வேண்டுமென்றே தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். இச்சூழ்நிலையில் செல்லாக் காசான தமிழ்மொழிச் சட்டத்தையும் நடைமுறைப் படுத்தமாட்டோமென நீங்களே பாராளுமன்றத்தில் இரண்டுமுறை வற்புறுத்திக் கூறிய தமிழ் மொழி பிரமாணங்களையும் திருத்தங்களாக அரசியல் அமைப்புச் சட்டத்தில் அந்தஸ்து ஏதுமின்றி வெறுமனே குறிப்பிடுவதால் தமிழ் மக்களுக்கு மொழி உரிமை கிடைக்குமென்று கூறுபவர்கள் பைத்தியக்காரர்களா? அதை நம்புபவர்கள் பைத்தியக்காரர்களா? உள்ளத்தைத் தொட்டு உண்மையைக் கூறுங்கள்!

---

## கல்விமந்திரியின் அழைப்பை நிராகரித்தனர் தமிழரசு பா.உ.க்கள்!

கல்வி அமைச்சரின் யாழ்ப்பாண விஜய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுமாறு அனுப்பப்பட்ட அழைப்பை தமிழரசுக்கட்சியின் யாழ். மாவட்ட எம். பீ.க்கள 7பேரும் நிராகரித்து விட்டனர். தங்களின் முடிவைக் கடித மூலம் அவர்கள் அமைச்சருக்குத் தெரிவித்துள்ளனர்.

திருவாளர்கள்: தந்தை செல்வநாயகம், துரைரத்தினம், இரத்தினம், நவரத்தினம், ஜெயக்கொடி, கதிரவேலுப்பிள்ளை, தர்மலிங்கம் ஆகிய 7 எம். பீக்களும் தங்களின் நிராகரிப்பைத் தெரிவித்து கல்வி அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளனர்.

"நீங்கள் தமிழ் மக்களுக்குப் பாதகமான கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறீர்கள்.

தரப்படுத்தல் என்ற ரீதியில் தமிழ் மாணவர்களுக்கு பல்கலைக்கழகப் பிரவேசத்தில் பெருந்தீமை இழைத்தீர்கள்.

தமிழ் ஆசிரியர் நியமனத்தில் மிகவும் பாரபட்சமாக நடந்துள்ளீர்கள்.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கான தெரிவில் தமிழ் ஆசிரியர்களுக்கு அநீதி இழைத்தீர்கள்.

பாடசாலைக் கட்டிட நிதி ஒதுக்கீட்டில் தமிழ்ப் பாடசாலைகளைப் புறக்கணித்தீர்கள்.

தமிழ்ப் பாடசாலைகளில் சிங்கள ஆசிரியரை நியமித்து சிங்களத்தை தமிழ் மக்கள் மேல் திணிக்க முயற்சி செய்து வருகிறீர்கள்.

எனவே, இவ்வாறு பாரபட்சமாக நடக்கும் உங்களை தமிழ் மக்களோ [illegible] பிரதிநிதிகளான நாமோ வரவேற்க முடியாது. உங்கள் வருகைபற்றிய நிகழ்ச்சிகளில் பங்கு பற்றவும் மாட்டோம்.

---

## குப்பிழானிலிருந்து விஜேதன் எடுத்தார் ஓட்டம்!

சிங்கள சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் உருவில் தொகுதி அமைப்பாளர் திரு. கு. விஜேதன் சென்றவாரம் மறைந்துவிட்ட சிறீலங்கா சுதந்திரக்கட்சிக்கு மீண்டும் உயிர் கொடுக்கும் நோக்குடன் குப்பிழான் கிராமத்துக்கு சென்றிருந்தார்.

இவரது அரசியல் திருகுதாளங்களையும் புரட்டுக்களையும் அம்பலப்படுத்தவென இளைஞர்கள் பலர் தயாராக சென்றிருந்தனர். வைத்திலிங்கம் என்பவரது தலைமையில் கூட்டம் நடந்தது. விஜேதன் பேச ஆரம்பித்ததும், தமிழரசுக்கட்சியை சாடத் தொடங்கினாராம்.

இது கேட்டு கொதிப்படைந்த இளைஞர்கள், புதிய அரசியல் திட்டம் பற்றியும் அதில் தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளது பற்றியும் சரமாரியாக கேள்விகள் கேட்டு விஜேதனைத் துளைத்தெடுக்க ஆரம்பித்தனர்.

இளைஞர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாமல் வேர்த்து விறுவிறுத்து திணறிப்போன விஜேதன், திக்கித்துப் போய் அலறத் தொடங்கி விட்டாராம். இறுதியில் கிளையும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம், இளைஞர்களிடமிருந்து தப்பினால் போதும் என்ற நிலையில் அங்கிருந்து ஓட்டம் பிடித்தார் என்று அறியப்படுகிறது!

---

## பதிவுமொழி சிங்களமே!

"இந்நாட்டிலுள்ள சகல நீதிமன்றங்களினதும் மொழி சிங்களமாகத்தான் இருக்கும். சிங்கள மொழிக்குக் கீழ்தான் தமிழ் மொழிக்கு வசதியளிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்ப் பகுதிகளான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள நீதிமன்றங்களின் பதிவுகள் (Records) சிங்களத்திலேயே வைக்கப்பட்டிருக்கும்."

—அ. நி. சபையில் அமைச்சர் கொல்வின.

---

## அமைச்சரை வரவேற்க நவம் மறுப்பு!

வரணி மகாவித்தியாலயத்தில் கல்வியமைச்சருக்கு அளிக்கப்படும் வரவேற்பொன்றில் கலந்துகொள்ளுமாறு மேற்படி பாடசாலை அதிபர் சாவகச்சேரி பா. உ. வுக்கு விடுத்திருந்த அழைப்பை திரு. நவரத்தினம் நிராகரித்துள்ளார்.

இதில் தாம் கலந்து கொள்ள முடியாததற்கான காரணங்களை விளக்கி, அப்பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர்களுக்கு திரு. நவரத்தினம் ஒரு சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

அச்சுற்றறிக்கையின் முடிவில், "மானமுள்ள எந்தத் தமிழனும் கல்வியமைச்சருக்கு அளிக்கப்படும் வரவேற்பில் கலந்துகொள்ளவே மாட்டான். அதுவும் இன்றைய தமிழினத்தின் துயரம் தோய்ந்த நிலையில், அமைச்சர்களை வரவேற்பதைவிட அவமானம் வேறு இல்லை" என்று திரு. நவரத்தினம் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலதும் பத்தும்

அமெரிக்காவில், சான் பிரன்சிஸ்கோ நகரில் அண்மையில் வைத்திய நிபுணர்களின் மாநாடு ஒன்று நடைபெற்றது. இம்மாநாட்டில் இரத்தக் கொதிப்பு நோய் பற்றி ஆராயப்பட்டது. இரத்தக் கொதிப்பு ஏன் ஏற்படுகிறது என்பது பற்றி அவர்கள் பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்தார்கள்!

உடலில் அதிகமாகக் கொழுப்பு வைப்பது, சிகரெட்பிடிப்பது, அதிகமாக உப்புச் சாப்பிடுவது, உடற்பயிற்சி செய்யாதிருப்பது, அடிக்கடி உணர்ச்சி வசப்படுவது, மற்றும் சில காரணங்களினால் இரத்தக் கொதிப்பு ஏற்படுகிறது.

இரத்தக் கொதிப்பு அதிகமானால் மாரடைப்பு அல்லது மூளையில் உள்ள இரத்தக் குளாய் வெடித்தல் ஆகிய வற்றினால் மரணம் ஏற்படும். இரத்தக் கொதிப்பைத் தவிர்க்க அடிக்கடி ஆஸ்பத்திரிகளில் உடல் பரிசோதனை செய்ய வேண்டும்.

ஃ

இந்தியா, இலங்கை, ஜப்பான், இஸ்ரேல், துருக்கி, எகிப்து மற்றும் பல நாடுகளில் திருமண வயது பற்றி அண்மையில் ஒரு கணக்கு எடுக்கப்பட்டது. இந்தக்கணக்கின்படி எல்லா நாடுகளையும்விட இந்தியாவில் உள்ள ஆண்களும் பெண்களும்தான் மிகவும் குறைந்த வயதில் திருமணம் செய்து கொள்ளுகிறார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஃ

1971ம் ஆண்டில் இந்தியாவில் மொத்தமாகத் தயாரிக்கப்பட்ட திரைப்படங்கள 433. இதில் 73 படங்களே தமிழ்ப் படங்கள் என்று புள்ளி விபரங்கள் கூறுகின்றன. இந்தியில் 117 படங்களும் தெலுங்கில் 85 படங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. தமிழ் மூன்றாவது இடத்தைப்பெறுகிறது.

ஃ

கவிஞர் சுப்பு ஆறுமுகம், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனிடம் 14 ஆண்டுகள் பணி புரிந்தவர். இந்தப் பதினான்கு ஆண்டுகளில் கலைவாணரிடம் சுப்பு ஆறுமுகம் கேட்டுப்பெற்றது ஒன்றே ஒன்றுதான் அதுதான் சுப்பு ஆறுமுகம் தனது கண்ணின் மணி போல பாதுகாத்து வரும் சின்னஞ் சிறு அழகான காந்தி சிலை. இந்தச் சிலை கலைவாணருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது நமது இலங்கையில் தான்!

ஃ

குஜராத் மாநில பல்கலைக்கழகத்தில் தமிழ் கற்றுக்கொடுக்கப்படுமென குஜராத் பல்கலைக்கழக துணைவேந்தர் உமாசங்கர் அறிவித்துள்ளார். இந்திய மொழிகளில் பழம் பெருமை வாய்ந்த மொழியாக தமிழ் திகழுவதால் அந்த மொழியைக்கற்றுக் கொடுப்பதென்று முடிவு செய்திருப்பதாக அவர் சென்னையில் அறிவித்துள்ளார்.

# நாட்டுக்குழைத்த தமிழன்

## நாதியற்றவனாக அல்லல்படுவதா?

## இந்நிலைதுடைத்திட ஒன்றுபட்டுழைப்போம்!

### இ. தொ. கழக தலைவர் தங்கத்துரை அழைப்பு!



"பத்து இலட்சத்துக்கு மேலான தமிழ் மக்கள் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்கிறார்கள். இந்த மக்கள் தங்கள் உழைப்பையெல்லாம் இந்நாட்டுக்காக அளித்தும், ஈற்றில் இன்று நாடற்றவன், நாதியற்றவன், கள்ளத்தோணி என்று பட்டங்களைப் பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். உழைத்து உழைத்து உருக்குலைந்துபோன இந்த மலையக சமுதாயத்தை ஆட்சியாளர்கள் இன்று விரட்டியடிக்கப் பார்க்கிறார்கள். இது தெரிந்தும் தொழிற் சங்கத் தலைவர்கள் என்று கூறிக்கொள்ளும் சிலர் வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றார்களே! இவர்களை மலையக மக்கள் இனியும் நம்பலாமா?"

இவ்வாறு நுவரெலியாவில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் கழக மாநாட்டில், மீண்டும் கழகத்தின் தலைவராக தெரிவுசெய்யப்பட்ட மூதூர் நா. உ. திரு. அ. தங்கத்துரை உரையாற்றிய போது முழக்கமிட்டார்.

திரு. தங்கத்துரை மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''இன்றுள்ள ஆட்சியாளர்கள் — குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சியினரும் சமசமாஜக் கட்சியினரும்—தாங்கள் இந்நாட்டின் ஆட்சிபீடத்தைக் கைப்பற்றினால் மலையக மக்களை வாழவைப்போம் என்று உறுதிகூறினர்கள். இன்று என்ன செய்கிறார்கள்?

இந்நாட்டின் குடியுரிமைப் பிரச்சினை சம்பந்தமாக அன்று அவர்கள் பேசும் போது, இந்நாட்டில் வாழுகின்ற சகல இன மக்களுக்கும் குடியுரிமை இருக்க வேண்டும் — அதைப் பெற்றுக் கொடுப்போம் என்று கூறி ஆட்சிபீடம் ஏறினர்கள். இன்று அதிகாரம் கையில் கிடைத்தவுடன் மலையக மக்களை நாடு கடத்த முயற்சிக்கிறார்கள்.

மலையகத் தமிழர்களுக்கு மீண்டும் குடியுரிமை வழங்க வேண்டுமென அரசியல் நிர்ணய சபையில் நமது தமிழரசுக்கட்சி கொண்டுவந்த பிரேரணையை எல்லாச் சிங்களக் கட்சிகளும் அனிசுமாகச் சேர்ந்து தோற்கடித்து விட்டார்கள்.

தமிழ் பேசும் மக்கள் இந்நாட்டில் இழந்த உரிமைகளை பெற ஒன்றுபட வேண்டும். வடக்கு, கிழக்கு, மலையகம் என்கின்ற வேறுபாடுகளைக் களைந்தெறியவேண்டும். இப்படி தமிழ் பேசும் மக்களிடையே ஒற்றுமையை வளர்ப்பதற்காகத்தான், தமிழரசுக் கட்சியின் கீழ் இயங்கும் இந்த இலங்கைத் தொழிலாளர் கழகத்தை மலைநாட்டில் ஆரம்பித்து பணியாற்றிவருகிறோம்! எனவே இலங்கை தொழிலாளர் கழகத்தின் கீழ் ஒன்றுபட்டு, குடியுரிமை மொழியுரிமை அரசுரிமையைப்பெற போராடுவோம். வாரீர் வாரீர் என்று மலையகத்து இளைஞர்களையும் பெரியோரையும் அழைக்கின்றேன்!

## மலையகத்திலே.......

## மலையகத்தில் சிவலிங்கம் நடத்தும் சின்னத்தனமான பிரச்சாரம்!

இரா-சிவலிங்கம் என்பவர் இன்று மலையகத்திலே அர்த்தமில்லாமற் துள்ளிக் குதிக்கின்றார். சோசலிசம் பேசிக் கொண்டு சொகுசு வாழ்க்கை வாழும் கனம் சிவலிங்கம் அரசாங்கத்திற்கும் மண்ணைத்தூவி அஸீசையும் காலைவாரிவிட்டுத்தனது தனிப்பட்ட செல்வாக்கை வளர்த்துக் கொள்ளப் படாதபாடுபட்டு வருகிறார். தம்மை வளர்த்துவிட்ட ஸ்தாபனத்தையே காலை வாரிவிட எண்ணும் இந்தச் சில்லறைப் புத்திக்காரர் மலையக மக்களுக்குச் சரியான வழிகாட்டுவார்என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

வருங்காலத்தில் ஏதாவது பெரிய பதவி கிடைக்கும் என்ற நப்பாசையில் கொட்டாவி விடும் இவர் தனது இன்றைய பதவியை வைத்துக் கொண்டு மலையகத் தமிழ்ப் பாடசாலைகளின் நிர்வாகங்களில் எல்லாம் அனுவசியமாகத் தலையிட்டு வருகிறார்.

இவ்வளவு காலமாகியும் தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் எடுக்கச் செய்ய வக்கில்லாத இவர் மலையகத்திலே உள்ள பாடசாலைகளிலே மலையகத் தமிழர், யாழ்ப்பாணத்தார், மட்டக்களப்பார் என்ற துவேஷ எண்ணங்களை வளர்த்து வருகிறார். மலையக மாணவர் மத்தியிலும் தனது சில்லறைப் புத்தியைக் காட்டி வருகிறார். இவரின் வாய்ப் பேச்சினாலே கவரப்பட்ட ஒரு சில இளைஞர்கள் சில சலுகைகளை எதிர்பார்த்து இவர் பின்னே [illegible] பார்க்கப் பரிதாபமாக உள்ளது.

ஒரு சில அற்ப சலுகைகளை எதிர்பார்க்கும் சில 'உதவாக்கரை' ஆசிரியர்களும் இவருக்கு வால் பிடிப்பது இன்னுமொரு வேதனைக்கும் வெட்கக் கேட்டுக்குமுரிய விடயமாகும்.

ஆனால் சிவலிங்கத்தினதும், இவரது 'வால்பிடி' ஆசிரியர்களினதும் சுயரூபம் பற்றியும் உண்மையில் மலையக மக்களுக்காகப் பாடுபடுபவர்கள் யாரென்பது பற்றியும் மலையக மக்களும், மாணவர்களும் ஏன் அகில உலகமுமே அறியும் என்பதில் எள்ளளவேனும் ஐயமில்லை —

— 'நாடற்ற' ரகு.

## இ. தொ. கழக புதிய நிருவாகிகள்

நுரலை நகர மண்டபத்தில் அமரர் டாக்டர் நாகநாதன் அரங்கில் இ. தொ. கழக தலைவரும், மூதூர்ப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. அ. தங்கத்துரை தலைமையில் ஞாயிறு காலை 10-30 மணியளவில் இ. தொ. க. ஒன்பதாவது மகாநாடு ஆரம்பமானது.

இம் மகாநாட்டில் தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம், திரு. வி. என். நவரத்தினம், திரு. தர்மலிங்கம், திரு. கதிரவேலுபிள்ளை, திரு. ஜெயக்கொடி முதலியோர் கலந்து கொண்டனர்.

அமரர் டாக்டர் நாகநாதன், அமரர் திரு. வெள்ளையன்(தேசிய தொழிற்சங்கத் தலைவர்) ஆகியோருக்கு இரண்டு நிமிடநேரம் அஞ்சலி செலுத்தப்பட்டது. பின் நடைபெற்ற நடப்பு வருட உத்தியோகஸ்தர் தெரிவில் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

பொதுச் செயலாளர்:— திரு. எம். பரராசசிங்கம் (வழக்கறிஞர்.)

தலைவர் :- திரு. அ. தங்கத்துரை.

துணைத் தலைவர்கள் திரு. கலியப்பெருமாள், திரு. வி. என். நவரத்தினம், திரு. அ. அமிர்தலிங்கம், திரு. சின்னத்தம்பி.

துணைச்செயலாளர் :- திரு. கெங்கரத்தினம், திரு. அந்தோணி.

இணைப் பொருளாளர்:— திரு. தர்மலிங்கம், திரு. தங்கவேல்.

மற்றும் இ. தொ. கழக செயற்குழு உறுப்பினர்களாக (அட்டன்) டி. ஜெகநாதன், சந்தனம், முருகன், வேலு, கோவிந்தசாமி, ஆறுமுகம்.

(தலவாக்கொல்லை) சபாபதி, ஜெபமாலை, செல்வராஜ், எல்லாளன், ப. ஆறுமுகம்.

(இராகலை) செம்புகராமன் காளிமுத்து, மாணிக்கம், இராமலிங்கம், அடைக்கன், ஆறுமுகம்.

(உடபுசல்லாவ) கதிர்வேல் பேச்சுமுத்து, வீரையா.

(பதுளை) டி. சுப்பையா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## நிச்சயமற்ற நிலையில் 10 இலட்சம் உயிர்கள் தவிப்பதா?

### கலியபெருமாள் குமுறல்!

'இந்திய அரசும், இலங்கை அரசும் தங்கள் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்து கொள்வதற்காக செய்து கொண்ட சிறிமா—சாத்திரி உடன்படிக்கையால் 10இலட்சம் உயிர்களின் எதிர்காலம் நிச்சயமற்றதாக்கப்படுவதை நாம் சகித்துக்கொள்ள முடியாது.'

இவ்வாறு நுவரெலியாவில் நடைபெற்ற இ. தொ. கழக மாநாட்டில் திரு. கலியபெருமாள் சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அவர் தமது அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:—

**மாதச்சம்பள கோரிக்கை**

கழகத்தின் பத்து அம்சக் கோரிக்கைகளில் ஒன்றாக மாதச்சம்பள கோரிக்[illegible] தொழிற் சங்கங்கள் எழுப்பி வரும் கோஷங்கள் தொழிலாளர்களின் கவனத்தை ஈர்ந்து வருவதை நாம் காண்கிறோம். தோட்டத் தொழிலாளர்கள் எதிர் நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு அடிப்படை பரிகாரம் காணவேண்டுமெனில் தொழிலாளர்கள் நிச்சயம் மாதச்சம்பள கோரிக்கையை வென்றெடுத்தே ஆகவேண்டும்? எனினும் துரதிட்டவசமாக இக்கோரிக்கையை வென்றெடுப்பதற்கு தொழிற்சங்கங்கள் ஓரணியமைத்து கூட்டாகச் செயல்படக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படவில்லை. அரசு தலையிடாத பட்சத்தில் இக்கோரிக்கையை தொழிலாளர்கள் வெற்றி பெறுவது துர்பலமே என்பது தெட்டத் தெளிவாகின்றது.

விசேடமான இக்கோரிக்கையை முன்வைத்து இ. தொ. கழகமும் இதர தொழிற்சங்கங்கள் சிலவும் தொழிற்சங்கங்கள் மத்தியில் ஒற்றுமையை கட்டிவளர்க்க அயராது பாடுபட்டன எனினும் அரசு சார்பான தொழிற்சங்கங்கள் ஒத்துழைக்க மறுத்து பிடிவாத போக்கை கடைபிடித்ததை நாம் கண்டித்தேயாகவேண்டும்.

**தோட்டப் பாடசாலைகளின் நிலை**

தோட்டப் பாடசாலைகள் தரமுயர்த்தப்பட வேண்டுமென நாம் தொடர்ந்து வற்புறுத்தி வற்புறுத்தி வந்துள்ளோம். எனவேதான் அரசின் தோட்டப் பாடசாலை தேசியமயமாக்கும் நடவடிக்கைகளை நாம் ஆதரித்து நிற்கிறோம். இந்நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டு தோட்டப் பகுதி சிறார்களின் பூரண கல்வி வசதிகள் பேணப்பட வேண்டுமென நாம் அரசை வற்புறுத்தும் நிலையில் இருக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழ் மொழியே தமிழர்களின் உயிர் மூச்சு!"

## குஜராத்தி மொழி மாநாட்டில் டாக்டர் கருணாநிதி பேருரை!

"ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் நிலைத்து வாழும் பழம்பெரும் வரலாறுடையது தமிழ்மொழி.

திருக்குறள் எங்களது அழியாத் தமிழ் இலக்கியம். உண்மை வாழ்வின் திருமறை! அதன் ஒழுக்கவியல் உள்ளடக்கத்தாலும், உலக நோக்காலும் அனைத்து மனிதக் குலத்தின் கலாச்சார ஆக்கத்தின் கருவூலம்—திருக்குறள்!

சிலப்பதிகாரம் மணிமேகலை, சங்கப் பாடல்கள் போன்ற எங்களது பழம்பெரும் இலக்கியங்கள் மனிதாபிமானமும்—கலாச்சார எழுச்சியும் நிறைந்தவை.

எங்கள் மொழியின் உரைநடை அண்மையில் வளர்ந்தது. எனினும், நடையில் ஒருவேகம்—உணர்ச்சி வெளியீட்டில் ஒரு ஆற்றல்—கருத்தில் ஒரு நன்நோக்கு—கொண்டதாகும்.

இந்த நேரத்தில் தமிழ் நாட்டில் மொழி மறுமலர்ச்சியில் எங்களது பேரன்பிற்குரிய தலைவர் அறிஞர் அண்ணாவின் முன் முயற்சிகளும், அழியாத படைப்புகளையும் தமிழர்கள் மறந்துவிட மாட்டார்கள்.

ஆகவே, தமிழ் ஒரு காலத்துப் பழம்பெரும் மொழியாயினும், அது ஒரு நவீன மொழியே.

தமிழ்மொழி — பழமையின் பெருமையில் ஒரு கருவூலம்!

அதே நேரத்தில் நவீன எண்ணங்களையும் கருத்துக்களையும் ஏற்றிச் செல்லும் சக்திமிகுந்த வாகனம்!

தமிழ் மொழிக்குக் கீர்த்திமிகு பழமை உண்டு! அது—நோக்கி மகிழவும்— அதன் உள்ளடக்கம் கொண்டு நடக்கவும்தான்!

தமிழ் பழமையின் சிறைக்கைதி அல்ல; பாரம்பரியங்களின் கொத்தடிமை அல்ல!

அதன் கண்ணோட்டம் நவீனமானது; அதனுடைய நோக்கம்—விரிபமிக்கது; நவீனகால மனிதனின் நம்பிக்கைகளிலும் கனவுகளிலும், தொல்லைகளிலும் முயற்சிகளிலும் ஆழ வேர் கொண்டு நிற்பது தமிழ்!

வளர்ச்சியின் துவக்கக் காலக்கட்டங்களில் தமிழ் இலக்கியம் அடிப்படையில் வெறும் ஒழுக்கவியலாகவே இருந்தது.

அடுத்த கட்டத்தில் பக்தியும்—மத உணர்வும் இலக்கியத்தில் செல்வாக்கும் பெற்றன. கோவில்களும், மன்னர் மண்டபங்களும் தமிழ் இலக்கிய விவாதம் நடக்கும் மன்றங்களாயின.

இலக்கியத்தின் ஆக்கப் பூர்வப் பணிகளுக்கு ஆதரவு தருவதில் மன்னர்கள் ஒருவருக்கு ஒருவர் போட்டியிட்டனர். மன்னர்களிலேயே பலர் கவிஞர்களாகவும் இருந்தனர்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் வீரியமிக்க வளர்ச்சி என்பது சில பத்தாண்டுகளுக்கு முன் தொடங்கியது. அந்த வளர்ச்சி—தமிழைப் பொதுமக்களின் மொழியாக மாற்றுவதுதான்!

அரசவை மொழியாக மட்டுமல்ல — இன்றைய தினம் மக்களின் மொழியாக—அவர்தம் மனதையும் மன நோக்கையும் காட்டும் கண்ணாடியாக, அவர்தம் கோரிக்கைகள், கனவுகள், நம்பிக்கைகள், அறை கூவல்கள் ஆகியவற்றின் குரலாக தமிழ் மொழி இருக்கிறது.

நான் பெருமைமிகு உரிமையுடன் சொல்லிக் கொள்ள முடியும்—

இலக்கியத்தையும் மக்களையும் இணைத்த—இலக்கிய உணர்வை சாதாரண மனிதனின் வாழ்வில் ஒன்றிணைத்த முயற்சிக்கு மற்றவர்களை விட அதிகமாக உதவிய ஒரு தலைவரிடம் நான் அரசியல்—இலக்கிய போதனை பெற்றேன்.

அந்தத் தலைவர்—அறிஞர் அண்ணா-நுண்புலம் வாய்ந்த அரசியல் மேதை மட்டுமல்ல; தமிழ் நாட்டு இலக்கிய இயக்கத்தின் முன்னோடி!

வாழ்வும் (இலக்கிய) எழுத்தும் இணைந்த இந்த கலாச்சார ஒருமைப்பாடு தமிழ்நாட்டை வேகமும், ஆக்கமும் நிறைந்த சக்திகளை வரவேற்கும் விருந்தினனாக ஆக்கியது. மக்களின் கலை—கலாச்சார வாழ்வில் வளம் பல சேர்த்தது.

இதன் மூலம் மக்கள் தங்களது அரசியல் முன்னேற்றத்துக்கும். பொருளாதாரப் புனர் வாழ்வுக்கும் வழி அமைத்துக்கொண்டனர்.

தமிழ்மொழி இன்றைய தினம் சாதாரண மனிதனோடு இணைந்து வாழ்கிறது; அவனுக்காக வாழ்கிறது.

தமிழ்மொழி இப்போது வெறும் 'அறிவு ஜீவி'களின் தப்பியோடும் தத்துவமல்ல; சாதாரண மக்களின் சமூக கலாச்சார விழிப்பின் சக்தி மிகுந்த வெளியீடாகத் திகழ்கிறது.

தமிழ் இலக்கியம் வேகம் மிகுந்தது; ஆனால் ஒரு சார்புடையது அல்ல! நோக்கமுள்ளது; ஆனால் வெறும் பிரச்சாரம் அல்ல!

அது மரபுகளை ஒப்புக் கொள்கிறது. ஆனால் மூடப் பழக்கத்திற்குத் தலைவணங்க மறுக்கிறது!

நெற்றி நெரிப்புகள் இல்லாத எளிய—உண்மையான மொழி அது!



உயர் நோக்கங்களோடு இணைந்தது அதன் கவிதை: பழங்காலக் கடுமை நிறை இலக்கண விதிகளில் மட்டும் சிறை பிடிக்கப்பட்டதல்ல அதன் கவிதை!

உணர்வு—என்பதே நவீனத் தமிழ்க் கவிதையின் இலக்கணம்! எழுச்சி என்பதே அதன் வெளியீடு! நம்பிக்கை—என்பதே அதன் நங்கூரம்!

புதுமை புனைதலும், கற்பனைகளும் இணைந்து புதிய உருவும், புதிய வடிவும் தமிழ்க் கவிதைகளிலும், உரைநடையிலும், கட்டுரைகளிலும், கவிதைகளிலும் தோன்றியுள்ளன.

சுருக்கமாக—தமிழ் இலக்கியம்—மாறுதலின்—வளர்ச்சியின் முன்னேற்றத்தின் சின்னமாக இருக்கிறது.

சக்திமிகு அகிம்சா ஆயுதக் கூடத்தில் தமிழ்மொழிதனக்குரிய இடத்தை எடுத்துக் கொண்டுள்ளது!

நான் தமிழ்மொழி இலக்கியத்தின் பெருமையை—புகழை—உங்களிடம் பேசிப் பகிர்ந்து கொள்ளும் உரிமையை எடுத்துக் கொண்டேன்.

காரணம் ஒருவன் தனது மொழிமீது பற்றுக் கொள்வது குறுகிய உணர்ச்சியுமல்ல! பிரதேச உணர்ச்சியுமல்ல—என நான் திடமாக நம்புகிறேன்.

நமது தேசிய உணர்வு உருவாக்கப்பட வேண்டிய அடிப்படையும் ஆதாரமும் இதுவாகத்தான் இருக்க வேண்டும்.

தமிழ் மொழி மீது நான் கொண்டுள்ள பற்றுத்தான் பிறமொழிகளை மதிக்க வேண்டும் என்ற உணர்வை என்னுள் தூண்டி விடுகிறது.

உணர்ச்சி மிகுந்த தமிழனாக நான் இருந்தால்தான் முழுமையான இந்தியனாக இருக்க முடியும்!"

## துரோகப்பரின் திருவிளையாடல்கள்!

**மாநகர எல்லைக்குள் நரிக்குண்டு, பாசையூர் போன்ற இடங்களில் வீடுகள் கட்டிக் கொடுத்ததன் மூலம் ஐக்கிய முன்னணி அரசாங்கம் தமிழர்களுக்கு நன்மை செய்திருக்கிறது. இப்படிப் பேசியிருக்கிறார் யாழ்ப்பாண மாநகர முதல்வர் ஸ்ரீமான் துரோகப்பர்.**

துரோகப்பருடைய வாயிலிருந்து தப்பித் தவறியேனும் ஒரு மெய் வராது என்பது எல்லோருக்கும் தெரிந்த பரகசியம். இந்தக்கூற்று அதற்கு ஒரு உதாரணம்.

நரிக்குண்டு, பாசையூர் வீடுகள் ஐக்கிய முன்னணி அரசாங்க உதவியால் கட்டப்பட்டது என்பது முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் மறைத்த கதைதான். ஆனால் இந்த வித்தையில் துரோகப்பர் கெட்டிக்காரர் என்பதை ஒத்துக்கொண்டே ஆகவேண்டும்!

நரிக்குண்டு, பாசையூர் திட்டங்களுக்கு நிதி உதவி கிடைத்தது இப்போதல்ல. நாலு ஆண்டுகளுக்குமுன் திருச்செல்வம் அவர்கள் உள்ளூராட்சி அமைச்சராக இருந்த காலத்தில் சபை விசேட ஆணையாளர்கள் வசம் அதற்குரிய கேள்விகள் கேட்கப்பட்டு வீடுகள் கிட்டத்தட்ட முடிந்தது திருவாளர்கள் நாகராசா - துரைராசா இருவரும் முதல்வர்களாக இருந்த காலத்தில்.

பாசையூர் வீடுகளுக்கு குடியிருப்பாளர்களைத் தெரிந்தது சென்ற வருடம் சித்திரை மாதம் துரைராஜா காலத்தில் கிட்டத்தட்ட 10 மாதங்கள் வீடுகள் முற்றுப்பெற்றும் கொடுபடாமல் இருந்துவந்திருக்கிறது. அதற்கு திரை மறைவில் நடந்த தில்லுமுல்லுகள்தான் காரணமாம்.

துரோகப்பரால் 'டெபூட்டி' என்றழைக்கப்படும் ஒரு மாநகரசபை உறுப்பினர் ஒருவருக்கு இந்த வீடுகளில் சிறிது காலம் வலோத்காரமாக குடியிருந்தவர்களுக்கும் இடையில் 'நெருங்கிய தொடர்பு' இருந்ததும் இந்த வீடுகள் கொடுக்கப்படாமல் கிடந்ததற்குமுக்கியகாரணம்என்ன என்பதுஎல்லோரும் அறிந்த விடயம்.

எனவே இந்த வீடுகள் கட்டியதற்கும் — ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. ஏன் துரோகப்பருக்குகூட இந்த வீடுகளை திறந்துவைத்த 'பாக்கியம்' மட்டும்தான் உண்டு மற்றப்படி அவருக்கும் இந்த வீடுகளுக்கும் ஒருவித தொடர்பும் இல்லை.

ஆனால் துரோகப்பர் விடமாட்டார். மற்றவர்கள் செய்யும் அத்தனை நல்ல காரியங்களுக்கும் தான் தான் காரணம் என்று 'தம்பட்டம்' அடிப்பது அவரது பிறவிக்குணம்! புதிய மாதிரிச் சந்தையையும் தான் தான் கட்டினேன் என்று சொன்னாலும் ஆச்சரியமில்லை. சொல்லுவார் என்று எதிர்பார்க்கலாம். 'யாழ்ப்பாணத்து ஒல்லாந்தர் கோட்டையைவிட மற்றெல்லாம் நான்தான் கட்டினவன்' என்று 'டமாரம்' அடிக்கும் பேர்வழி துரோகப்பர்!

சரி. வாதத்துக்காக இந்த பதினைந்து வீடுகளையும் இந்த அரசாங்கத்தின் உதவியோடுதான் கட்டினதாக வைத்துக்கொள்வோம். [illegible] துரோகம் செய்யவில்லையென்று அர்த்தமா? பாவம் துரோகப்பருடைய அரசியல் 'ஞானம்' இவ்வளவுதான்! இதற்குமேல் அவரிடம் எதிர்பார்ப்பது 'மகாபாவம்!!' நக்கிப் பிழைப்பதே அவரது அரசியல். விட்டுத்தொலைப்போம்!

*

மேயர் துரோகப்பரின் வலதுகையென்று வர்ணிக்கப்பட்டுவந்த மாநகரசபை உறுப்பினர் ஒருவர், மேயரின் இன்றைய திருவிளையாடல்களையும் திருக்கோலத்தையும் கண்டு மனம் வெதும்பி-மனச்சாட்சியின் குரலுக்கு மதிப்பளித்து துரோகப்பரது முகாமிலிருந்து வெளியேற முடிவுசெய்து விட்டதாக நம்பப்படுகிறது. இதற்கு முன்னோடியாக துரோகப்பரால் அளிக்கப்பட்ட சமாதான நீதிவான் பட்டத்தையும் துறந்துவிடவும் முடிவுசெய்துவிட்டார் என அறியக் கிடக்கிறது.

**யாழ்—நிருபர்**

நீதி, நேர்மை, தூய்மை, சத்தியம் இவற்றிற்காக மாநகரசபைக்கு உள்ளும் புறமும் பலகாலம் போராடி வந்திருக்கும் இவ் உறுப்பினர் துரோகப்பரின் துரோக ஆட்சிக்கு, நீதியை கொலைசெய்யும் ஆட்சிக்கு, 'இட்லரும்' 'யாகாகானும்' வெட்கப்படவேண்டிய சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக மனம்மாறியது இந்த உறுப்பினரை அறிந்தவர்களுக்கு-அவரோடு நெருக்கமாகப் பழகியவர்களுக்கு எள்ளத்தனை ஆச்சரியத்தையும் கொடுக்கமாட்டாதென்பது திண்ணம்.

யாழ்ப்பாண மாநகர சபை வீட்டுத் திட்டத்தின் கீழ் பாசையூரில் கட்டப்பட்ட வீடுகள், வேலைகள் பூர்த்தியாகி பல மாதங்களாகியும் இன்னும் ஒருவருக்கும் கொடுக்கப்படாமல் பூட்டப்பெற்றுக் கிடக்கின்றன. வீடுகள் கொடுக்கப்படாமல் இருப்பதற்கு காரணம் மேயருக்கும், அவரால் செல்லமாக 'டெபூயுட்டி' என்றழைக்கப்படும் ஒரு உறுப்பினருக்கும் இடையில் உள்ள கருத்து வேற்றுமையாம். இந்த உறுப்பினருக்கு சில ஆயிரம் கொடுக்கப்பட்டதாகவும்-கொடுத்தவர்கள் வீட்டைத் தா அல்லது காசை திருப்பித்தா என்று கேட்பதாகவும் சொல்லப்படுகிறது.

*

யாழ்ப்பாண நகரசபையில் கடமையாற்றிய மின்சார பொறியியலாளர் மாற்றலாகியதும் அந்தப் பதவி தேவையில்லையென்றும், அதற்குப் பதில் இரண்டு மின்சார அத்தியட்சகர் பதவி சிருஷ்டிக்கப்பட வேண்டுமென்றும் சபை தீர்மானித்தது. ஆனால் மேயரோ ஒரு குடு குடு கிழவனை மின்சார ஆலோசகராக இரவோடு இரவாக நியமித்திருக்கிறார். இந்த மனிதருக்கு கண்பார்வை சரியில்லை, காதோ கேட்காது, பொல்லின் உதவி வேண்டும் நடக்க! சரி சம்பளம்? சனியாகமாதம்800/-. ஊரான்வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையே' என்று சொன்னவன் கதைதான் ஞாபகம் வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரகாலச் சட்டத்தை நீக்கிப் பாருங்கள்!

# தமிழ் மக்களின் மனக்கொதிப்புப் புரியும்!

## நெல்லியடி பட்டினசபை தீர்மானம்!

'புதிய அரசியல் சட்டம் இலங்கை வாழ் தமிழ் மக்களின் நலன்களுக்கு பாதகமாக அமைந்திருப்பதால் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் அதை நிராகரிக்க வேண்டுமென்றும் குறிப்பாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் எவராவது அதில் கைச்சாத்திடக்கூடாது என்றும் இச்சபை தீர்மானிக்கிறது'

—இவ்வாறு கூறும் தீர்மானம் ஒன்று நெல்லியடி பட்டின சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. இப்பிரேரணையை 4ம் வட்டார உறுப்பினர் திரு. சி. செல்லையா முன்மொழிய 1ம் வட்டார உறுப்பினர் திரு. ஐயாத்துரை வழிமொழிந்தார்.

## ஆட்சியாளர்களுக்கு நாவலர் அமிர்தலிங்கம் சவால்!

சித்தங்கேணி இளைஞர் முன்னேற்ற கழகத்தின் சார்பில் சென்ற 28-4-72 அன்று மன்றத்தலைவர் ச. தனபாலன் தலைமையின் கீழ் 'புதிய அரசியலமைப்பும் தமிழரும்' என்ற விடயம் பற்றி கருத்தரங்கு நடைபெற்றது.

இதில் வட்டுக்கோட்டை முன்னைநாள் பா. உ. அமிர்தலிங்கமும் உடுப்பிட்டி முன்னைநாள் பா. உ. திரு. சிவசிதம்பரமும் உரையாற்றினர்கள்.

முதலாவதாக திரு. சிவசிதம்பரம் பின்வருமாறு உரையாற்றினர்:—

''புதிய அரசியலமைப்பை தமிழ் காங்கிரஸ் முழுமனதுடன் எதிர்கின்றது. இதில் எமது கட்சிக்கும், தமிழரசுக்கட்சிக்கும் வேற்றுமை கிடையாது. தமிழ் கட்சிகள் ஒற்றுமைப்பட வேண்டிய காலம் நெருங்கிவிட்டது.

கடந்த பொதுத்தேர்தல் நடந்து ஒரு சில மாதத்தின் பின் நான் நண்பன் அமிர்தலிங்கத்தை அவரது வீட்டில் சந்தித்து ஒற்றுமை பற்றி எடுத்துக் கூறினேன். அவரும் தமது கட்சியுடன் கலந்தாலோசித்து ஒற்றுமை ஏற்படக் கூடிய சந்தர்ப்பத்தில் எமது காங்கிரஸ் கட்சி பா. உ. மூவரும் அரசாங்கத்தின் பக்கம் சேர்ந்ததால் முயற்சி கைகூடவில்லை.

புதிய அரசியலமைப்பு தமிழ் மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம் என்று இங்கு சிலர் கூறித்திரிந்தும், பத்திரிகைகளில் அறிக்கை விட்டும் வருகின்றார்கள். இப்படி கூறிவருபவர்கள் அரசியல் திட்டத்தை இன்னும் வாசிக்கவில்லை போலும்.

இத்திட்டத்தை எதிர்த்து கூட்டம் போடவோ, ஒலிபெருக்கி பாவிக்கவோ, முடியாதபடி அரசாங்கம் தனிமனிதனின் சுதந்திரத்திற்கு தடை விதித்துள்ளது. ஆனால் அமைச்சர்களின் வரவேற்புக் கூட்டங்களுக்கு ஒலிபெருக்கி அனுமதி வழக்கப்பட்டிருக்கின்றது.

இத்திட்டத்தில் கைச்சாத்திடாது உங்கள் பிரதிநிதியை நீங்கள் கேட்கவேண்டும். நீங்கள் தெரிவு செய்த பிரதிநிதியை கேட்பதற்கு எனக்கோ, இல்லாவிட்டால் அமிர்தலிங்கத்திற்கோ உரிமை கிடையாது. உங்களுக்கு உரிமை உண்டு இத்திட்டத்தில் கைச்சாத்திடாமல் உங்கள் பிரதிநிதியை கேட்பதே முதல் போராட்டமாக இருக்கவேண்டும். இதன் பின் நாம் ஒன்றுகூடி அடுத்த நடவடிக்கை பற்றி முடிவு எடுப்போம்.

ஆனால் ஒன்று மட்டும் நான் உங்களுக்குச் சொல்லி வைக்க விரும்புகிறேன். அன்று சரஸ்வதி மண்டபத்தில் கூறியதுபோல் இத்திட்டத்தில் கையொப்பமிடும்போது மூவரும் தமிழ் காங்கிரஸ் உறுப்பினராக மட்டும் இருக்கமாட்டார்கள்.

நாவலர் அமிர்தலிங்கத்தின் உரை வருமாறு:—

''எந்த கம்யூனிச நாட்டிலாவது மதத்திற்கு முதல் இடம்கொடுக்கப்படவில்லை. இங்கு பௌத்த மதம்தான் அரசாங்க மதமாம். மற்றைய மத மக்களின் வரிப் பணத்தை வாங்கி பௌத்த மதத்தை வளர்ப்பதுதான் சமதர்மமா? ஒரு இனத்தை நசுக்கி இன்னொரு இனம் சலுகை பெறுவது சமதர்மமா? சமதர்மம் பேசுபவர்கள் யாராக இருந்தாலும் சமதர்மம் பற்றி பொது மேடையில் என்னுடன் பேசுவதற்கு முன்வருவார்களா? என்று சவால் விடுகிறேன்.

''இங்கு வந்த உதவி நிதி அமைச்சர் தமிழ் மக்களுக்கு என்ன உரிமை வேண்டும்? எல்லா உரிமையுடனும்தான் இருக்கிறார்களே. இதை விட வேறு என்ன வேண்டும் என்று ஓர் கூட்டத்தில் பேசினாராம். ஐயா உதவி நிதி அமைச்சரே, உங்கள் அரசியல் திட்டத்தை திருப்பி, திருப்பி வாசித்தால் உங்களுக்கு புரியும். என்ன கொடுத்து விட்டீர்கள் என்பது: அவசரகாலத்தை நீக்கினால் இத்திட்டத்தின் எதிர்ப்புகள் தெரியும். முழு மூச்சுடன் தமிழ் மக்கள் புதிய அரசியல் திட்டத்தை எதிர்க்க வேண்டும்''

## நல்ல பகிடிகள்

### முதலாளிகள் ஒழிக!

இலங்கையில் முதலாளி வர்க்கம் ஒழிக! என்று குரல் எழுப்பும் தொழிலாளி வர்க்கத் தலைவர்கள் எல்லோருமே முதலாளிகள்தானாம். விக்கிரமசிங்காவின் தோட்டத்தில் வேலைசெய்கிற தொழிலாளிக்கும், சண்முகதாசனின் வீட்டில் வேலை செய்கிற வேலைக்காரனுக்கும் 'முதலாளி' என்றால் யார் என்று நன்றாகத் தெரியுமாம்.

வெள்ளவத்தை விஜயலெட்சுமி புத்தகசாலை, குமரன் அச்சகம் முதலாளி கணேசலிங்கன், தன்னுடைய பளபளப்பான காரிலே கொழும்பு விதிகளைச் சுற்றிவரும் பெரியவீட்டு முதலாளி கைலாசபதி, செருப்பை விட்டாலும் சீதனத்தை விடமாட்டேன் என்று அடம்பிடித்த முதலாளி பொன்னம்பலம் ஆகியோர் அனைவரும் தொழிலாளி வர்க்கத் தலைவர்கள்தானாம்.

'ஒழிக முதலாளிகள்!' என்று நாமும் குரலெழுப்புவோம்.

### தவறணை திறந்தாச்சு.... தாம் தீம் தை!

தமிழினத்துக்கு அள்ளி வைப்பவர்களில் ஒருவரும் அரசியலில் 'சிமேலல்' தனமாக நடந்துகொள்பவருமான 'ஒட்டறை வீரர்' சமீபத்தில் கொக்குவில் கூட்டம் ஒன்றுக்கு நிறைதண்ணியில் வந்துசேர்ந்தாராம். கொக்குவில் மக்களுக்கு முன்னாலேயே ''கொக்குவில்லும் கோண்டாவில்லும் என்னோடு ஒருநாளும் ஒத்துழைத்ததில்லை. நீங்கள் மனுஷர்களா'' என்று கேட்டாராம். கூட்டத்தில் முன்வரிசையில் இருந்தவர்கள் மூக்கைப் பொத்திப் பிடித்துக்கொண்டிருந்தார்களாம். கூட்டத்தில் இருந்த ஒருவர் இப்படிச் சொன்னார் என்று தெரியவருகிறது. ''தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு குடிக்காகப் போராடுகிறார்கள் — இந்த மனுஷன் இன்னொரு குடிக்காகப் போராடுகிறது.''

### சூரியதாசருக்கு 'சூரியபகவான் அடி!'

சூரியபகவான் இப்போது தமிழ்ப்பகுதிகளுக்கு பயந்து பயந்தே போய் வருகிறாராம். பத்து நாட்களுக்கு முன்பு சூரிய பகவான் மூளாயிலுள்ள ஒரு கோவிலுக்கு சாமி கும்பிடப் போயிருந்தாராம். போகும்போது பகவானோடு அவரது மெய்காப்பாளர்களும் போயிருந்தார்களாம்.

சூரியபகவான் கோவிலுக்கு வருவதை அறிந்து அவரது தாசர் ஒருவர் (இவர் போன தேர்தலின்போது தெரியாத்தனமாக காவடி பக்கம் நின்று அரோகரா போட்டவர்) பகவான் தரிசனத்துக்காக கோயிலுக்குப் போனாராம். இந்த தாசர் ஒரு கார் டிரைவராம். காரில் இருந்து இறங்கி வழக்கத்தில் யாழ்ப்பாண மக்கள் சாதாரணமாய் தெருவில் நிற்பதுபோல் இவரும் சண்டிக்கட்டோடு நின்றாராம். இதைக் கண்ட பகவான் ஆரோ தன்னை அடிப்பதற்கு வந்திருக்கிறான் என்று பயந்து மெய்காப்பாளரை ஏவிவிட்டாராம். 'என்னடா உனக்கு சண்டிக்கட்டு — பகவானுக்கு முன்னே' என்று மெய்காப்பாளர் சூரியதாசருக்கு போட்டாராம் அடி! சூரியதாசர் அடுத்த நிமிடமே சுதந்திர தாசராக மாறினார் என்றும் சூரியபகவான் ஆட்சியில் நடக்கும் அடக்குமுறை அட்டூழியத்தை எதிர்க்க இப்போது புதிய உறுதி பூண்டுள்ளாராம் என்றும் தெரியவருகிறது.

"கோமாளி"

## புதிய அரசியல்...

(1ம் பக்கம் தொடர்ச்சி)

ற்றை எதிர்த்த நாம், இன்றும் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

''திருத்தப்பட்ட அரசியல் சட்டத்தில் அத்தியாயம் 2 எட்டாவதுவிதியில் (மொழி சம்பந்தப்பட்ட விதிகளின் கீழ்) குறிப்பிடப்பட்டுள்ளது நடைமுறையிலுள்ள பிரமாணங்களைப் பற்றியே! இதன் பொருள் சட்டபூர்வமாக நடைமுறையிலுள்ள சட்டங்கள் என்பதே!

1958-ம் ஆண்டுத் தமிழ்மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ், 1966-ம் ஆண்டு முந்திய அரசு கொண்டு வந்து நிறைவேற்றிய பிரமாணங்கள் இந்த வகைக்குள் அடங்கமாட்டா. ஏனெனில் அவை சட்டபூர்வமாக அமுலில் இருக்கவில்லை! ஆகவே தமிழ் மொழிப் பிரமாணங்கள் புதிய அரசியல் சட்டத்தின் கீழ் செல்லுபடியாகாது''

—இவ்வாறு அரசியலமைப்பு அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா அரசியல் நிர்ணயசபையில் மொழி சம்பந்தமாக விளக்கமளிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

[அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1958ம் ஆண்டின் தமிழ்மொழி விசேட ஏற்பாடுகள் சட்டம், பிரமாணங்களின்றி நடைமுறைப்படுத்தப்பட முடியாத ஒரு சட்டமாகும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.]

## புலோலி கிராமசபை எதிர்ப்பு!

புதிய அரசியல் சட்டம் தமிழ் மக்களுக்கு விரோதமானதால் அதற்குச் சாதகமாக தமிழ் பா. உ. க்கள் ஒவரும் கையொப்பமிடக் கூடாதென்றும புலோலி கிராமசபையும் ஒரு தீர்மானம் நிறைவேற்றி பா. உ. க்களுக்கு அனுப்பியுள்ளது.

## தமிழ் ஈழமெங்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெறும் விழாக்களை மாணவர்கள் புறக்கணிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதென்றும் முடிவுசெய்யப்பட்டிருக்கிறது.

ஏனைய எதிர்ப்பு நடவடிக்கைகள் பற்றி 13-5-72 சனிக்கிழமை திருகோணமலை நகர சபை மண்டபத்தில் நடைபெறும் பொது மாநாட்டிலும் முடிவு எடுக்கப்படும் என்று தெரிகிறது.

## திருமண அழைப்பு

எதிர்வரும் வைகாசி மாதம் 2ம் திகதி (15-5-72) திங்கட்கிழமை மாலை 4 மணி முதல் 6 மணிவரையுள்ள கும்பலக்கின சுபமுகூர்த்தத்தில்

| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
|---|---|
| இராசதுரை<br>(நேஷனல் அன் கிறின்லீஸ் வங்கி ஊழியர்)<br>அவர்கட்கும் | இந்திராணி<br>அவர்கட்கும் |

மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெறும். அத்தருணம் குடும்ப சமேதராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு உறவினர்களையும் நண்பர்களையும் பணிவன்புடன் வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

| | |
|---|---|
| இராசரத்தினம் தம்பதிகள், | இளையதம்பி தம்பதிகள், |
| வட்டு கிழக்கு, | வட்டு கிழக்கு, |
| வட்டுக்கோட்டை, | வட்டுக்கோட்டை |


கடமை

''தன் கடமையை தவறாதவன் வேறு எந்த அறத்தையும் செய்ய வேண்டும் என்ற அவசியமே இல்லை.''

—ஞானி.

மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளை சேகரித்து அனுப்பி அறிவு நூல்களை வாங்கிப் படியுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்குக் காணி வேண்டுமா? 31-5-72க்குமுன் விண்ணப்பியுங்கள்!

## தமிழரசு அலுவலகத்தில் படிவங்கள் கிடைக்கும்!

யாழ்ப்பாண மாவட்டத்தில் வதியும் தமிழ் மக்களுக்கு குடியேற்றத் திட்டங்களில் காணிபெற அரியவாய்ப்புக் கிடைத்துள்ளது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி குடியேற்றத் திட்டங்களில் காணி பெற உடன் விண்ணப்பித்து தமது தாயகத்தை வளமாக்க தமிழ் இளைஞர்கள் உடன் முன்வரவேண்டும். குடியேற்றத் திட்டங்களில் காணிபெற விண்ணப்பிப்பதற்கான கடைசித் திகதி 31.5.1972 ஆகும்.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுக் கட்சியின் தலைமைப் பணிமனையில் (25, 2ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்) இதற்கான விண்ணப்பப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

பின்வரும் குடியேற்றத் திட்டங்களில் காணிகள் வழங்கப்படவுள்ளன.

அக்கராயன் குளம்,

தென்னியன் குளம்,

கோட்டை கட்டினகுளம்,

அம்பலப் பெருமாள் குளம்,

மருதங்குளம்-முருகண்டிக் குளம்,

கரியாலை நாகபடுவான்,
வவனிக் குளம்,

இத்துடன் கிராஞ்சி, முளங்காவில் மேட்டுநிலக் குடியேற்றத் திட்டங்களில் உள்ள வெற்றுக்காணிகளுக்கும், விசுவமடுக்குளத்திலுள்ள கிராம விஸ்தரிப்பு குடியேற்றத் திட்டங்களில் உள்ள வெற்றுக் காணிகளுக்கும் குடியேற்றவாசிகள் தெரிவுசெய்யப்படுவர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நிரந்தரமாக வசிக்கும், தெரிவுசெய்யப்பட்டமை பற்றி அறிவிக்கும் குறுகிய கால அறிவித்தலில் திட்டத்தில் நிரந்தரமாகக் குடியேற ஆயத்தமாகவுள்ள, உண்மையில் காணியற்ற விவசாயிகளிடமிருந்து கிடைக்கும் விண்ணப்பங்கள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

வசிப்பதற்கும் பயிரிடுவதற்கும் காணியற்ற விவசாயிகளின் விண்ணப்பங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். ''அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்'' என விலாசமிடப்பட்டு விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''குடியேற்றத் திட்டங்களில் காணித்துண்டொன்றுக்கான விண்ணப்பம்'' எனக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் 31.5.72ம் திகதிக்கு முன்னதாக அனுப்பப்படுதல்வேண்டும்.

விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் அனுப்பியதற்கான, தபாற் கந்தோரால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு, காணிக் கச்சேரியில் காண்பிப்பதற்கென, விண்ணப்பிப்போர் வைத்திருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படமாட்டா.

1972.5.31ம் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படமாட்டா.

தெரிவின்போது, பிள்ளைகளின் எண்ணிக்கை மாத்திரம் கணக்கிற்கொள்ளாது. காணியில்லாமை, விவசாய அறிவு, நாட்டின் தேவையை உணர்ந்து பயிர் செய்கையில் உள்ள ஊக்கம், நாட்டம், விவசாய வேலையின்மை ஆகியவற்றிற்கு அதிமுக்கியத்துவம் அளிக்கப்படும்.

பின்வரும் திகதிகளில் பின்வரும் இடங்களிலுள்ள காரியாதிகாரி அலுவலகங்களில் காணிக் கச்சேரிகள் நடைபெறும். இக்காணிக் கச்சேரிக்கு விண்ணப்பதாரர்கள் தங்களதும் தங்கள் குடும்பத்தினரினதும் அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களுடன் சமுகமளிக்கவேண்டும்.

| | |
|---|---|
| பருத்தித்துறை | 10-7-72<br>11-7-72 |
| உடுப்பிட்டி | 4-7-72<br>5-7-72 |
| தெல்லிப்பளை | 29-6-72<br>30-6-72 |
| கோப்பாய் | 10-7-72<br>11-7-72 |
| சங்கானை | 27-6-72<br>28-6-72 |
| நெடுந்தீவு | 29-6-72<br>30-6-72 |
| ஊர்காவற்றுறை | 3-7-72<br>4-7-72 |
| சாவகச்சேரி | 28-6-72<br>29-6-72 |
| பளை | 10-7-72<br>11-7-72 |
| துணுக்காய் | 6-7-72<br>7-7-72 |
| பூனகரி | 10-7-72<br>11-7-72 |
| யாழ்ப்பாணம் | 3-7-72<br>4-7-72 |
| கிளிநொச்சி | 6-7-72<br>7-7-72 |

# சங்கப் பலகை

**நூல்: பூஜைக்கு வந்த மலர்**
**ஆசிரியர்: ந. பாலேஸ்வரி.**
**விலை: ரூபா 2. 25.**
**வெளியிட்டவர்கள்: வீரகேசரி பிரசுரம், த. பெ. இல. 160 கொழும்பு.**

ஈழத்தின் முன்னணி சிறுகதை எழுத்தாளரும் பிரபல நாவலாசிரியையுமான திருமதி ந. பாலேஸ்வரியை சுதந்திரன் வாசகர்கள் நன்கு அறிவார்கள். அவர் எழுதிய 'எங்கே நீயோ நானும் அங்கே உன்னோடு' என்னும் நாவல் சுதந்திரனில் வெளிவந்து வாசகர்களது பாராட்டைப்பெற்றது தெரிந்ததே.

இவரும் ஒரு பெண் என்பதனாலோ என்னவோ பெண்களின் உள்ளத்தைச் சுண்டி இழுக்கும் வண்ணம் படைப்புக்களை உருவாக்குவது இவருக்கு கைவந்த கலை. அதற்கு 'பூஜைக்கு வந்த மலரும்' விதிவிலக்கல்ல.

ஒரு கொடியில் மலர்ந்த இருமலர்களின் வெவ்வேறுபட்ட குணவியல்புகளை பாத்திரங்களாக கொண்டு ஒரு பெண்ணின் தியாக வாழ்வையும் பொறுமையையும் சித்திரிக்கும் உருக்கமான நாவல் இது! படிப்போர் உள்ளங்களை நெகிழவைத்து கண்ணீர்க்கடலில் ஆழ்த்திவிடும் உணர்ச்சி மிகுந்த இந் நாவல், ஈழத்து இலக்கிய உலகுக்கு வந்த புதியதோர் மலர் என்பதில் ஐயமில்லை.

160 பக்கங்களில் அழகான அட்டைப்படத்துடன் இந் நூல் பார்ப்போரையும் படிப்போரையும் ஒருங்கே கவருகிறது.

★

**நூல்: பொழுதுபோக்கு**
**ஆசிரியர்: எஸ்.பி. கிருஷ்ணன்**
**விலை: ரூபா 2-00**
**வெளியிட்டவர்கள்: மலர்விழி வெளியீடு, 535 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

நகைச்சுவை என்பது ஓர் அருள்கலை. அக்கலை கைவந்தவர்கள் பாராட்டப்படவேண்டியவர்கள். அதிலும், நகைச்சுவையைப் பயன்படுத்தி, மக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும் அதே நேரத்தில் அவர்களது உள்ளங்களில் பதிய வைக்கக் கூடிய வகையில் சமுதாய சீர்கேடுகளையும் புட்டுக் காட்டுபவர்கள் இன்னும் பாராட்டப்படவேண்டியவர்கள்.

நல்ல சிறுகதை எழுத்தாளர் என்று நமக்கெல்லாம் அறிமுகமான திரு. எஸ். பி. கிருஸ்ணன், 'பொழுது போக்கு' என்னும் இப்புதிய தொகுப்பின் மூலம் சிறந்த 'சிரி கதை' எழுத்தாளர் என்னும் பாராட்டையும் பெற்றுவிடுகிறார்.

12 'சிரி' கதைகள் கொண்ட இத்தொகுப்பிலுள்ள ஒவ்வொரு 'சிரி' கதையும் வாசகர்களை சிரிப்பிலாழ்த்துவது மட்டுமன்றி சமுதாயத்திலுள்ள மூட நம்பிக்கைகளை நையாண்டி செய்து புட்டுக் காட்டுவதாக அமைந்துள்ளது.

எஸ். பி. கிருஷ்ணனின் முயற்சிக்கு தமிழ் வாசகர்கள் ஆதரவு தரவேண்டும்; அப்போதுதான் நகைச்சுவைச் சிரி கதைகள் மேலும் வெளிவர முடியும்.

★

**நூல்: சதுரங்கம்**
**தொகுத்தவர்: எஸ். பொன்னுத்துரை.**
**விலை: ரூபா 2-00**
**வெளியிட்டவர்கள்: அரசு வெளியீடு, 231, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13.**

'அரசு' வெளியீட்டாளர்களின் 30வது நூலாக 'சதுரங்கம்' வெளிவந்துள்ளது. ஆர். பாலகிருஷ்ணன், வ. அ. இராசரத்தினம், எம். ஏ. ரகுமான், எஸ். பொன்னுத்துரை, டாக்டர் சாலை இளந்திரையன் ஆகியோரது படைப்புக்கள் இதில் இடம் பெற்றுள்ளன.

சதுரங்கம் என்ற விளையாட்டின் சாயலில் — காலாள் குதிரை, தேர், யானை என்னும் பேர் கொண்ட காய்களின் இயல்புச் சாயலில் — சில பாத்திரங்களைப் படைத்துக்காட்ட இதில் நான்கு எழுத்தாளர்கள் முயன்றிருக்கிறார்கள்.

சாலை இளந்திரையன் அவர்கள் தனது 'அமைச்சு' எனும் பகுதியில் இந்நூல் பற்றிக் கூறியுள்ள கருத்துக்களை அப்படியே ஏற்றுக் கொள்ளலாம்.

★

**'இசையாளன்'**
**ஆசிரியர்: எஸ். ஆர். ஞானசுந்தரம்.**
**விலை: சதம் 75.**

இசை என்பது முத்தமிழில் ஒன்று. தமிழர் வாழ்வு இசையுடன் கலந்தது. இசை மூலம் இறைவனைக் கூட அடையலாம் என்பது தமிழர் கருத்து. தமிழர் வாழ்வில் இரண்டறக் கலந்துவிட்ட இசையை நாட்டில் பேணி வளர்த்து வரும் இசையாளர்களை ஒன்றிணைத்து அவர்களிடையே தொடர்புகளையும் கருத்துப் பரிமாறல்களையும் ஏற்படுத்தவும், முன்னேற்றப்பாதையில் இசையையும் இசையாளர்களையும் வளர்த்துச் செல்லவும் 'இசையாளன்' என்ற இந்த ஏடு தோன்றியுள்ளது.

★

**'தமிழருவி'**
**வெளியீடு: தமிழ் மன்றம், இலங்கைத்தொழில் நுட்பக் கல்லூரி, கொழும்பு-10**

இலங்கைத்தொழில் நுட்பகல்லூரி தமிழ் மன்றத்தினரின் சஞ்சிகையான 'தமிழருவி' கிடைக்கப்பெற்றோம். பகவான் சத்தியசாயி பாபாவின் அழகிய வண்ணப் படத்தையும் அவரது அருள் வாக்கையும்கொண்டு எழிலுடன் திகழும் இம்மலரை பல நல்ல கட்டுரைகள் அணி செய்கின்றன. மலர் ஆசிரியர்கள் இரா. பூபாலரத்தினம். க. தில்லைநாதன் ஆகியோர் கெட்டிக்காரர்கள்!

# இஸ்லாமிய தமிழர் இயக்கம்

புனித இஸ்லாமிய மதத்தில் பிறந்து தமிழ்மொழியை தாய்மொழியாகக் கொண்டு வீட்டிலும் தமிழ் ரோட்டிலும் தமிழ், எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று இப்படி சகல துறைகளிலும் தமிழையே உபயோகித்து வருகிறார்கள் முஸ்லிம் மக்கள்.

இப்படியிருக்க, தமிழிலேயே ஊறி வளர்ந்த இஸ்லாமியராகிய நாம் தமிழுக்கு ஏற்பட்டிருக்கும் இழிவையும் அழிவையும் ஊமையைப் போலப்பார்த்துக் கொண்டிருப்பது நியாயமானதுதானா? சகோதரர்களே சற்று சிந்தித்துப் பாருங்கள்!

இன்று வங்காள தேசப் பிரதமராக இருக்கும் முஜிபுர் ரகுமான், மதத்தைப் பற்றி கொஞ்சம் கூடச் சிந்திக்காமல் அவர் பேசும் மொழியைப்பற்றியே சிந்தித்தார். அன்று சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவர் இன்று உலகே போற்றும் அளவுக்கு மாபெரும் தலைவராகி விட்டாரே! கோடிக்கணக்கான மக்களைக் கொன்று குவித்த யாயா கான் என்ன ஆனான்? தெரியாதா உங்களுக்கு? ஒருவேளை குமாரசூரியர், அருளம்பலம் தியாகராசாபோன்ற ஒரு சில எட்டப்பர்கள் இருக்கும் போது, அவர்களைப் போல் நாமும் இருந்தால் என்ன என்று நினைக்கிறீர்களா?

தப்பு... தப்பு...! எவை எப்படியிருப்பினும் நம்மை வளர்த்து ஆளாக்கிய— நம்மை ஈன்றெடுத்த தமிழ்த் தாயை மாற்றான் கற்பழிக்கும் போது பார்த்துக் கொண்டிருக்க நாம் என்ன கையாலாகாதவர்களா? இதை தமிழ்ப்பற்றுள்ள ஒவ்வொரு இஸ்லாமிய தமிழரும் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

தமிழ்ப்பற்று என்றால் என்ன? நாம் பேசும் மொழியை பேணிக்காப்பது தானே! நாம் பேசுவதும் தமிழ்தானே! அப்படியிருக்கும் போது இந்துக்களுக்கு மட்டும்தான் ஆபத்து; இஸ்லாமியராகிய எமக்கில்லை என்று எப்படிக் கூற முடியும்? அப்படிக் கூறினால் அது நமக்கு இழுக்கு ஆகும். இஸ்லாமியராகிய எமது உயிரும், உணர்வும் தமிழ் மொழியே.

இதை மறந்து தமிழை ஒழிக்கும் ஆட்சிக்கு வால் பிடிக்கும் அல்ஹாஜ் பதியுதீன் அவர்களே! அமைச்சர் மந்திரி மஜீத் அவர்களே! நீங்கள் செய்வது சரிதானா? நன்கு சிந்திப்பீர்!

நான் இனத்தால் தமிழன். மதத்தால் இஸ்லாமியன் என்று ஒவ்வொரு இஸ்லாமியனும் கருதவேண்டும்.

—ஏ. வி எம். றபீக்
நிந்தவூர்

★

## வெட்கக்கேடு!

முகமது நபி அவர்கள் பிறந்த தினமான 27-6-72 அன்று மூதூரில் உள்ள முஸ்லிம் வியாபாரிகள் ஒருவராவது தங்களது கடைகளை முற்காலங்களைப் போல பூட்டி ஒரு விதமான சோடனைகளும் செய்யவில்லை.

இஸ்லாமியக் கலைவிழா என்ற போர்வையில் 31-3-72 நடந்த ஏ. எல். ஏ. மஜீத் விழாவின் போது மூதூரில் உள்ள முஸ்லிம் வியாபாரிகள் தங்கள் கடைகளைப் பூட்டியும் வீதிகளை சோடனைகள் செய்தும் விளம்பரப் பிரியரான மாண்புமிகு தகவல் ஒலிபரப்பு உதவி அமைச்சர் அவர்களுக்கு விழா எடுத்தார்கள்.

விளம்பரப் பிரியரை விட நபிகள் நாயகம் அவர்களுக்கு மதிப்புக் கொடுக்காத மூதூர் முஸ்லிம்களை அயல் கிராம முஸ்லீம் மக்கள் எவ்வளவு கீழ்த்தரமான முறையில் ''மூதூர் முஸ்லீம் மக்களை'' நினைப்பார்கள் என்று மூதூர் முஸ்லீம் மக்கள் நினைத்து பார்க்காதது வெட்கப்படக் கூடியதும் வேதனைக்குரியதுமான விஷயமாகும்.

மூதூரில் உள்ள முஸ்லிம்கள் நபிகள் நாயகத்தை விட விளம்பரப்பிரியர் அப்துல் மஜீத்துக்கு தனி மதிப்புக் கொடுப்பதைக்கவனித்தால் நபிகள் நாயகத்தின் போதனைகளையும் அவர்கள் மீது நம்பிக்கை இல்லையென்பதையும் காட்டுவதற்கு இதைவிட வேறு உதாரணம் வேண்டுமா!

எதிர்காலத்திலாவது நபிகள் நாயகத்தின் மீதும் இஸ்லாத்தின் மீதும் நம்பிக்கை வைத்து நபிகள் நாயகம் பிறந்த தினத்தை சிறப்பாகக்கொண்டாட மூதூர் முஸ்லீம் மக்கள் முன்வர வேண்டும்.

இப்படிக்கு
எஸ். ஏ. அக்பர்
அக்கரைச்சோலை
மூதூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (13)

## காலன் வைத்த குறி தவறியது!



# அண்ணாவின் தமிழ்நாடு கண்டேன்

**கோவை-மகேசன்**

பாண்டி நாடு என்றவுடன் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பாண்டிய மன்னர்களும், கையிற் சிலம்புடனும், விரித்த கருங் குழலுடனும், நெரித்த புருவங்களுடனும் பாண்டியன் நெடுஞ்செழியன் அவையில் கற்பின செல்வி கண்ணகி வழக்குரைத்த காட்சியும், நீதி தவறியதால் தன் செங்கோல் வளைந்ததென்ற சேதி கேட்டு நெடுஞ்செழியன் அரியணையிலிருந்து கீழே வீழ்ந்து உயிர் நீத்து வளைந்த செங்கோலை நிமிர்த்திய மாட்சியும் கணவன் இறந்தது கண்டு ஆற்றாத கோப்பெருந் தேவியார் அந்த இடத்திலேயே உயிரைவிட்ட உள்ளத்தை தொடும் காட்சியும், நம் நினைவுக்கு வந்து நமது எண்ணங்களை எங்கெங்கோ கொண்டு சேர்த்து விடும்!

சேரன், சோழன், பாண்டியன், ஆகிய மூவேந்தர்கள் தமிழ் நாட்டை ஆண்டிருந்த போதிலும், தமிழ் மொழியை வளர்த்த பெருமை இம் மூவரிலும் பாண்டியர்களுக்கே உரியது. முச்சங்கம் அமைத்து, முதுபெரும் தமிழ்ப்புலவர்களுக்கெல்லாம பொன்னும், மணியும, அள்ளிக்கொடுத்து தமழை வளர்த்த பெருமை பாண்டிய மன்னர்களையே சாரும்.

பாண்டி நாடென்றவுடன் நம் மனக்கண் முன், வைகை யாற்றங்கரையிலுள்ள மதுரையம்பதியும், அதன் நடுவே வானுயர்ந்த கோபுரத்துடன் கம்பீரமாக மீனுட்சிஅம்மன்ஆலயமும்காட்சி தரும்.

மதுரையை அழகுபடுத்தும் வைகையாறு வரலாறுப் பெருமையையும் புராணப் பெருமைகளையும் கொண்டது. இந்த ஆற்றில் தான் திருஞானசம்பந்தருக்கும் சமணத்துறவிகளுக்கும் 'புனல்வாது' நடைபெறறதாகவும், வைகையில் எழுந்த உடைப்பை அடைக்கவே இறைவன் கூலியாளாக வந்து பாண்டியனிடம் பிரம்படி பட்டதாவும் புராணங்கள் கூறுகின்றன. சிவபெருமான் அறுபத்து மூன்று திருவிளையாடல்களை புரிந்ததும், இந்த மதுரைத் திருநகரில்தான் என்று சைவ மக்கள் நம்புகிறார்கள்.

திருச்சியிலிருந்து விடியற் காலை ஐந்து மணிக்கு தமிழ் நாடு அரசு விரைவு பேருந்து வண்டியில் மதுரையை நோக்கிச் சென்று கொண்டிருந்த எனது மனதில் பாண்டி நாட்டின் பழம்பெரும் சிறப்புக்களும் பசுமையான நினைவுகளும் தோன்றிக் கொண்டேயிருந்தன.

திருச்சியிலிருந்து தெற்கே 96 மையில் தூரத்தில் அமைந்துள்ளது மதுரை மாநகர். மதுரை மாநகரைப் பார்க்க வேண்டும் என்று என் மனதில் எழுந்த துடிப்பைப் புரிந்துகொண்டோ என்னவோ டிரைவர் 'வாயு வேக மனோவேகம்' என்று கூறுவார்களே அந்த வேகத்தில் பேருந்து வண்டியை செலுத்திக் கொண்டிருந்தான்.

எனக்கோ பேருந்துவண்டி செல்லும் வேகத்தைப்பார்க்கப்பார்க்க நெஞ்சு 'திக்திக்' என்று அடித்துக்கொண்டேயிருந்தது. பத்திரமாக போய்ச் சேருவோமோ அல்லது மதுரைக்கு போகிற வழியில் எங்காவது எமன் காத்துக்கொண்டிருக்கிறானே என்கிற எண்ணத்துடன் வழிவழியே பார்த்துக்கொண்டே சென்றேன்!

திடீரென்று ஒரு வளைவால் வண்டி திரும்புகிறது!

படீர்......! கிறீச்......! ஒரு குலுக்கல்!

முன்னாலிருந்த ஆசனத்தில் மோதிக்கொள்ளுகிறேன்!

என்ன இது? ஆ...' யமன் வைத்திருந்த பொறி சிறிது தவறிவிட்டது. தப்பி விட்டேன்!

எதிராக வந்துகொண்டிருந்த ஒரு லாரி மீது உரசிக்கொண்டு நமது வண்டி நிற்கிறது!

நமது டிரைவர் கெட்டிக்காரர்! இல்லாவிட்டால்...! நினைக்கவே நெஞ்சு நடுங்குகிறது.

பேருந்து வண்டியும் லாரியும் மோதிக்கொள்வது தவிர்க்கப்பட்டு நாம் உயிர் பிழைத்தாலும், இருபக்கத்து டிரைவர்களுக்குள்ளும் ஏற்பட்ட மோதலைத் தவிர்ப்பது பிரயாணிகளுக்கு பெரும் பாடாக இருந்தது!

ஒரு மாதிரியாக இருவருக்கும் சமரசம் ஏற்பட்டு மீண்டும் நம் பிரயாணம் தொடர்ந்தது! நாம் மதுரைக்குள் நுழைந்துவிட்டோமென்பதை உயர்ந்துநிற்கும் கோபுரங்கள் நமக்கு சொல்லாமல் சொல்லுகின்றன!

மதுரையை அன்றும் இன்றும் அழகுபடுத்துவது மீனுட்சி அம்மன் ஆலயம் தான். பரிபாடல் என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது போல் இவ்வாலயம் நகரின் நடுவில் பொய்கையில் பொன் போல மிளிர்கிறது!

மதுரைக்கு 'ஆலவாய்' 'கடம்பவனம்' 'கபாடபுரம்' என்ற பெயர்கள் சரித்திர காலத்தில் வழங்கப்பட்டு வந்துள்ளன. இன்று மதுரை மீனுட்சி ஆலயம் தமிழர்களின் சிற்பக்கலைக்கு ஓர் எடுத்துக்காட்டாக — ஈடு இணையற்ற கலைப் பொக்கிஷமாக — காண்போரை எல்லாம் கவரும் கலைக் கோயிலாக விளங்குகிறது.

மதுரையை ஒரு திருவிழா நகரம் என்று கூறலாம். ஆண்டு முழுவதும் ஆலயத்தில் நடைபெறும் வண்ணத் திருவிழாக்கள், மதுரைக்கு ஒவ்வொரு நாளும் பொலிவு கூட்டுகிறது.

காலச் சூழலால் மீனுட்சி ஆலயத்துக்கு எத்தனையோ சோதனைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆயினும் அத்தனைக்கும் இடையில் தன் பெருமையை நிலை நாட்டிக் கொண்டு இந்த ஆலயம் சிறப்புற்று விளங்குகிறது.

மாலிக்காபூரின் படையெடுப்பால் பாண்டிய மன்னர்களின் காலத்தில் கட்டப்பட்ட இக்கோவிலின் பதினான்கு கோபுரங்கள் தகர்க்கப்பட்டன. பின்னர் விசுவநாத நாயக்கர் காலம் முதற்கொண்டு இக்கோவில் புதுப்பிக்கப்பட்டு வந்திருக்கிறது. கோவிலை செப்பனிட்டுக் கட்ட 120 இலட்ச ரூபாவும் 120 ஆண்டு காலமும் ஆயிற்று என்றால் பணியின் பெருமையையும் புதிதாக கட்டப்பட்ட ஆலயத்தின் பெருமையையும் விவரிக்கத் தேவையில்லை.

கோவிலின் கட்டிட அமைப்பு, திராவிடக் கலை நுட்பத்துக்கு ஓர் எடுத்துக் காட்டாக திகழுகிறது. தற்போது கோவிலில் ஒன்பது கோபுரங்கள் உள்ளன. இவற்றுள் நான்கு மிக உயரமானவை. இந்நான்கும் 60 அடி உயரமுள்ள ஒரே கல்லினுல் ஆகிய வாயில் தூண்களுடன் தொடங்கி படிப்படியாக பல அடுக்குகளை கொண்டிருக்கிறது. இவற்றுள் கிழக்கோபுரம் மிகப் பழமைவாய்ந்தது. இது சுந்தரபாண்டியனுல் கட்டப்பெற்றது.

மேற்குக்கோபுரமேஅனைத்திலும் மிக உயரமானது. மேலக் கோபுரத்தில் திருவிளையாடற் புராணக்காட்சிகளை சித்திரிக்கும் அழகுச் சிற்பங்கள் மட்டுமேயுள்ளன.

மீனுட்சியின் ஆலயம் பதினைந்து ஏக்கர் அளவு பரப்புள்ளது. இதன் வெளிச் சுவர்கள் 847 அடி 792 அடி கொண்ட நீண்ட சதுர வடிவம் உடையவை.

மீனுட்சி ஆலயத்தில் நுழைந்ததும் முதலில் காண்பது அட்ட சக்தி மண்டபமே. இதன் முகப்பில் சமீபத்தில் புதுப்பிக்கப்பட்ட மீனுட்சி-சுந்தரேசரின் திருமணக்கோல வடிவைக்காணலாம். மண்டபத்தின் இருபக்கத்திலும் மீனுட்சி பிறப்பு, குழந்தைப்பருவம், ஆட்சிச் சிறப்பு, திக்கு விஜயம், சுந்தரேசர் சந்திப்பு, திருமணம் ஆகிய காட்சிகளைக் காணலாம். இங்கு கோவிலில் வழிபாட்டிற்கான தேங்காய், பழம், சூடம், சாம்பிராணி விற்கும் கடைகள் இருக்கின்றன.

அட்டசித்தி மண்டபத்தை அடுத்து 170 அடி நீளமுள்ள மீனுட்சி நாயக்கர் மண்டபம் இருக்கிறது. இது திருமலை நாயக்கரிடம் அமைச்சராக இருந்த மீனுட்சிநாயக்கர் பெயரால் வழங்கப்படுகிறது.

மீனுட்சி நாயக்கர் மண்டபத்திலிருந்து மேலே சென்ருல் முதலி மண்டபத்தையடையலாம். இவ்விரண்டு மண்டபங்களுக்கும் நடுவே 'திருவாசி' உள்ளது. இது நூற்றுக்கு மேற்பட்ட எண்ணெய் விளக்குகளைக்கொண்டது. தினமும் மாலையில் ஏற்றப்படும் இவ்விளக்குகளை சிவகெங்கை மன்னர் அளித்திருக்கிருராம். இங்கு பிட்சாடனர், மோகினி, அனுசூயா ஆகிய எட்டு சிற்பங்கள் அணிவகுத்து நிற்பதைக் காணலாம். இவற்றுள் [illegible] வேலைப்பாடுகளுடன் அமைந்தது.

முதலி மண்டபத்தை அடுத்துள்ள பொற்றாமரைக் குளம் வரலாற்று சிறப்புடையது. பொற்றாமரைக்குளத்தைச் சுற்றியுள்ள வடபுறச் சுவர்களில் சிவபிரானின் 64 திருவிளையாடல்கள் சித்திரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். தென்புறச் சுவரில் தமிழ்மறையாம் திருக்குறள் -1330 குறள்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

இன்னும்மேலே செல்வோமானுல், மகாமண்டபத்தில் தேவியர் இருவருடன் திருமலை நாயக்கர் கம்பீரமாகக் காட்சி தருகிருர். உள்ளே நுழைந்து அர்த்தமண்டபத்தில் நின்று பார்த்தால் அன்னை மீனுட்சியின் அழகொழுகும் திருக்கோலத்தை தரிசிக்கிறோம். அன்னை மீனுட்சியின் தெய்வீக அழகையும் காம்பீர்யத்தையும் அருட்பார்வையையும் வர்ணிக்க வார்த்தைகளே கிடையாது.

மதுரை மீனுட்சி அம்மன் ஆலயத்தை ஓர் கலைக்கோவில் என்றே சொல்லலாம். சிவ-பார்வதியின்சிற்பக்கோலங்கள், அழகுமாதர்கள் நடனக்கோலங்கள், திருவிளையாடற் புராணச் சித்திரிப்புக்கள் ஆகியவற்றை சித்திரிக்கும் நாயக்கர் காலச் சிற்பங்கள் ஆலயத்துக்கு இணையற்ற கலைச்சிறப்பை அள்ளித்தருகின்றன. இங்குள்ள ஆயிரம் கால் மண்டபத்தின் ஒவ்வொரு தூணிலும்செதுக்கப்பட்டிருக்கும் சிற்ப வேலைகளை எத்தனை நாட்கள் சென்றாலும் பார்த்துப் பார்த்து ரசித்துக்கொண்டேயிருக்க முடியும்.

புதுமண்டபமும் திருமலை நாயக்கர் மகாலும் மதுரையின் மற்றும் இரு சிறப்புக்கள். புது மண்டபத்தில் 120 தூண்கள் உண்டு. 333 அடி நீளமும் 105 அடி அகலமும் உடையது. இதனைத் திருமலை அரசர் கட்டினர். இம்மண்டபத்தைக் கட்டிமுடிக்க 22 ஆண்டுகள் பிடித்தனவாம் 104 இலட்சம் ரூபா செலவிடப்பட்டதாம்.

திருமலை நாயக்கர் அரண்மனை மதுரைநகர புகையிரத நிலையத்திலிருந்து ஒன்றரை மைல் தொலைவில் உள்ளது. தஞ்சை அரசரின் மகளான தம்மனைவியின் விருப்பப்படி இதனைத் திருமலை நாயக்கர் கட்டினுராம்.

மதுரையிலிருந்து ஆறு மைல் தொலைவில் 'திருப்பரங்குன்றம் இருக்கிறது. குன்று தோறுடும் குமரனின் ஆறுபடை வீடுகளிலொன்று இத்திருப்பரங்குன்றம். மலையைக் குடைந்து இக்கோவிலை அமைத்திருக்கிருர்கள். திருப்பரங்குன்றம் கோவிலும், அங்கு முருகன் காட்சி தரும் அழகுக் கோலமும் கோவிலைச் சுற்றியுள்ள எழில்மிகு காட்சியும்பார்க்க தெவிட்டாத காட்சிகள்.

இவ்வாருக பாண்டி நாட்டின் தலைநகரான மதுரையின் அழகில் இந்தவாரம் மயங்கிய நாம் அடுத்த வாரம் சோழநாட்டின் தலைநகருக்கு சென்று அதன் எழில் காண்போம்.

வளரும்

---

## தொழில் நுட்பக் கல்லூரித் தமிழ்மன்றம்

இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி தமிழ் மன்றத்தின் புதிய உத்தியோகத்தர்கள் தெரிவு அண்மையில் நடைபெற்றது, விபரம் வருமாறும்:-

காவலர்: திரு. ஜி. விக்கிரமரட்ன (அதிபர்) உப தலைவர்கள்: திரு. சி. மாணிக்கவாசகர், திரு. பொ. சங்கரப்பிள்ளை. (விரிவுரையாளர்கள்.)

தலைவர்:- சி. வெஸ்லி கனகரத்தினம், உப தலைவர்: கு. செல்லையாபிள்ளை, செயலாளர்: நா. சந்திரபோஸ், உப செயலாளர்: செல்வி. இந்துமதி அங்கமுத்து, இதழாசிரியர்: எம். ஏ. எல். எம். சலீம், துணை இதழாசிரியர் க. சிவசுப்பிரமணியம், பொருளாளர்: கே. சிங்கராயர், இலக்கியச் செயலாளர்: சு. வசந்தமோர்.

இவர் அடங்கிய செயற்குழு வருமாறு:-

செல்வி. க. பரமேஸ்வரி, து. ஜெகதீஸ்வரன், இ. பி. மதுரநாயகம், மு. இ. மு. நஊப், க. பெ. சிறீதரன்.

## நீர்கொழும்பு இந்துவாலிபர் சங்கம் புதிய நிர்வாகிகள்

காப்பாளர்: முன்னை நாள் மூதவை உறுப்பினர் திரு. த. நீதிராசா, தலைவர்:— திரு. ஐயம் விஜயரத்தினம், துணைத் தலைவர்:- நா. சண்முகநாதன், ச. நடராசா, அ. சுரேந்திரன், டாக்டர் சோ. பாலசுப்பிரமணியம், பொதுச் செயலாளர்:- இ. பேரின்பநாயகம். துணைச் செயலாளர்:- பொ. இராதாகிருஷ்ணன். பொருளாளர்: சி. முருகையா, துணைப் பொருளாளர்:- அ. தா. முத்துப்பிள்ளை, விளையாட்டுப் பகுதிச் செயலாளர்:- சண் இரத்தினம். நூலகப் பொறுப்பாளர்:- க. இரத்தினராசா, ஆட்சி மன்ற உறுப்பினர்கள் வருமாறு:- க. விஸ்வநாதன், சு. இராமகிருஷ்ண. நா. மு. ஐயம்பிள்ளை. மா. மகாலிங்கம். க. அருணுசலம், இ. இராசேந்திரன், சி. நடராசா, ந. தெய்வேந்திரன், சீ. பத்மநாபன் செட்டியார், கு. தில்லைநாதன், அ. வே. தேவராசா, ந. இளமுருகதாஸ், சு. நவரத்தினராச, தா. சேகராசசிங்கம், கணக்குப்பரிசோதகர்:- எம். எஸ். கந்தசாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3வது வாரம் கிங்ஸ்லி (கொழும்பு) விஜயா (மட்டுநகர்)



ஜெய்சங்கர் மனோகர் பாரதி

—நடித்த—

# நான்கு கில்லாடிகள்

4வது வெற்றி வாரம்

கெப்பிட்டல் (கொழும்பு) - பிளாசா (வெள்ளவத்தை)

வெலிங்டன் (யாழ்நகர்)

சிவாஜி, லட்சுமி, முத்துராமன், நாகேஷ், குமாரி சச்சு, நம்பியார்

—நடித்த—

# தங்கைக்காக

12 வது வாரம் கெயிட்டி



# கண்ணே பாப்பா

5வது வாரம் செல்லமகால்

நாகேஷ்
ஜெமினி கணேசன்,
ராஜஸ்ரீ,
பேபிராஜி



நடித்த

# பத்தாம்பசலி

கதை—வசனம்—டைரக்ஷன்: — கே. பாலசந்தர்.

சிலோன் என்டடெயின்மென்ட்ஸாரின் திரைகளில் காட்சியளிக்கிறது

7வது வாரம் சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்நகர்)

சிவாஜிகணேசன், ரங்காராவ்,
ஜெயலலிதா, நாகையா,
பாலாஜி, ராகவன்,
சந்திரபாபு, பண்டரிபாய்,
சுந்தரராஜன், மனோகர்,

நடிக்கும்

சுஜாத்தாவின்

# ராஜா

(ஈஸ்ட்மன் கலர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

இப்பத்திரிகை இலங்கை ... லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை 194வ, இலக்கத்தில் 78-ம் வருடம் மே மாதம் 14-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.